வித்துவான், பண்டிதர், சைவப்புலவர் .

## திரு. க. வேந்தனார் அவர்களின்

# புகழ்வளச் சோலையின்

## ஒரு மலர்.

பராபவ—ஐப்பசி—௨

(1966 - 10 - 18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துவான், பண்டிதர், சைவப்புலவர்

## திரு. க. வேந்தனார் அவர்களின்

# புகழ்வளச் சோலையின்

## ஒரு மலர்.

பராபவ—ஐப்பசி—௨


(1966 - 10 - 18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ லங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



வித்துவான், பண்டிதர், சைவப்புலவர்

தமிழ்ப் பேரன்பர்

**திரு. க. வேந்தனார் அவர்கள்**

தோற்றம்
5-11-1918

நிறைவு
18-9-1966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# எனதருமைத் தந்தையார்
# வித்துவான் க. வேந்தனார் அவர்களின்
# வரலாற்றுச் சுருக்கம்

செந்தமிழ்ப்புலமையும் தெய்வச்சால்பும் மிக்கவராக் விளங்கிய யாழ்ப்பாணத்து வேலணையூர் வித்துவான் வேந்தனார் அவர்கள் இன்று எம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள். அவரின் தந்தையார் சரவணையூரில் வாழ்ந்த சைவ வேளாண் குலத்தோன்றல் **கனகசபைப்பிள்ளை** ஆவர். தாயார் திருந்துகுணச் செல்வி **தையல் முத்து** அம்மையார். இவ்விருவரும் செய்த அருந்தவத்தினால் தனியொரு புதல்வனாகத் தோன்றிய வேந்தனார் அவர்கள் தான் பிறந்த அன்றே பெற்ற அன்னையை இழந்தார். பின், தந்தையின் அன்பாலும் ஆதரவாலும் வளர்க்கப்பட்ட வேந்தனார் அவர்கள் இளமைப் பருவத்திலேயே கல்வியில் மிக வல்லவராக விளங்கினார்.

அவர் வேலணையில் உள்ள சைவப்பிரகாச வித்தியாசாலை, சரசுவதிவித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் தமது ஆரம்பக் கல்வியைப் பயின்றார். இங்ஙனம் கல்விகற்று வருங் காலத்திலேயே **இந்துசாதனம், ஈழகேசரி** ஆகிய பத்திரிகைகளில் சமய சம்பந்தமான கட்டுரைகளையும், இலக்கியக் கட்டுரைகளையும், எழுதிவந்தார். இவற்றோடு புராணங்களுக்குப் பயன சொல்லியும் வந்தார். பின் 1934-ஆம் ஆண்டில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினரால் நடாத்தப்பெற்ற பாலபண்டித பரீட்சையில் தோற்றி முதலாம் பிரிவிற் சித்தியடைந்தார். இத்தகுதியுடன் தான் முன்பு கல்வி கற்ற இருபாடசாலைகளிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார். பின் 1941-ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தினரால் நடாத்தப் பெற்ற **பண்டித பரீட்சையில்** தோற்றிச் சித்தியடைந்து மதுரைத் தமிழ்ச் சங்கப் **பண்டிதரானார்.** அதன் பின்னர் 1942-இல் சைவ சித்தாந்த மகா சமாஜத்தினால் நடாத்தப்பெற்ற சைவப்புலவர் பரீட்சையில் தேறிச் **சைவப்புலவர்** ஆனார். இப் பட்டம் 1942-இல் சீர்காழியில் திரு. கதிரேசச் செட்டியார் தலைமையில் நடைபெற்ற சைவ மகாநாட்டில் வழங்கப்பட்டது. அவர் இம் மூன்று பரீட்சைகளிலும் ஆசிரியரின் துணையில்லாமல் தன்முயற்சியினாலேயே தமிழைக் கற்றுச் சித்தியடைந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

1943-ம் ஆண்டிலே யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலிப் பரமேசுவரக்கல்லூரியில் இருந்த பண்டித ஆசிரிய பயிற்சிச் கழகத்திற் சேர்ந்து இரண்டு ஆண்டுப் பயிற்சி பெற்றுத் தேறிப் பயிற்றப்பட்ட ஆசிரியராக விளங்கினார். அக்கழகத்தில் அதிபராக இருந்த பெருங்கலைக்குரிசில் சிவப்பிரகாசம் அவர்களுடைய மதிப்பையும், அங்கே விரிவுரையாளராக இருந்த மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனார், இளமுருகனார், சிதம்பரப்பிள்ளை என்போரின் நன்மதிப்பையும் பெற்றார்.

இங்ஙனம் வேந்தனார் அவர்கள் பண்டித ஆசிரிய பயிற்சிக் கழகத்தில் சேர்ந்து பயிற்சி பெறும் காலத்தில் தனித் தமிழ் ஆசிரியர் சுவாமி வேதாசலம் (மறைமலையடிகள்) அவர்களைத் தமது ஆசிரியராகக் கொண்டார். பின் 1944-ஆம் ஆண்டில் வித்துவான் பரீட்சை எடுப்பதற்காக இந்தியா சென்ற பொழுது மறைமலையடிகளாருடன் தங்கியிருந்து கல்வி கற்றார். அவ்வாண்டிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னைப் பல்கலைக் கழகத்தால் நடாத்தப் பெற்ற **வித்துவான் பரீட்சையில்** தேறினர். தனித்தமிழ் ஆசிரியர் உயர்திரு மறைமலையடிகளாரைத் தமது ஆசிரியராகக் கொண்டமையினலேயே அவரும் தனித்தமிழ் நடையை விரும்பிப் போற்றினர்.

இவர் சிறந்த புலமைவீறு படைத்தவராய் விளங்குதலைக் கண்டும் கேட்டும் களித்த திருவாளர். சு. நடேசபிள்ளை அவர்கள் 1946-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியில் தமிழ்விரிவுரையாளராக வீற்றிருந்து கடமையாற்றும் வாய்ப்பை [illegible]கினர். அன்று தொடக்கம் இன்றுவரை அக்கல்லூரியின் ஆக்கம் கருதி உழைத்து வந்த வித்துவான் வேந்தனர் அவர்கள் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் நன்மதிப்பையும் பெற்றுத் திகழ்ந்தார். அவர் அக்கல்லூரியின் முன்னைநாள் அதிபர் திருவாளர் நடேசபிள்ளை அவர்களிடமும், இப்பொழுதைய அதிபர் திருவாளர் சிவபாதசுந்தரம் அவர்களிடமும் நிறைந்த அன்பும மரியாதையும் வைத்திருந்தார்.

பின் 1947-ம் ஆண்டில் தண்தமிழ்த்தாயின் தனித் தெய்வத் தன்மைகளை தேமதுரத் தமிழ்ப்பாக்களால் திசைமணக்கத் திகழ்வித்திருப்பதற்காகத் திருவாவடுதுறை மகா சந்நிதானத்தார், திருவாரூர் மொழியரசி அரங்கேற்று விழாவில் **'தமிழ்ப்பேரனபர்'** என்னும் பட்டத்தை உவந்து நல்கினர்.

வேந்தனர் அவர்கள் 1947-ஆம் ஆண்டில் திரு. நாகலிங்கம் அவர்களின் புதல்வியாகிய **சவுந்தரநாயகியைத்** தமது வாழ்க்கைத் துணைவியாராகக் கொண்டார். இருவரும் கருத்தொருமித்த அன்பினராய் வாழ்ந்து **கலையரசி, இளங்கோ, தமிழரசி இளஞ்சேய், இளம்வேள்** என்னும் இரண்டு புதல்விகளையும், மூன்று புதல்வர்களையும் பயந்து மகிழ்ந்தனர்.

இவர் இலங்கை வானெலியில் பலகவியரங்குகளில் பங்குபற்றியுள்ளார். அன்றியும் இலக்கிய சமய சம்பந்தமான விரிவுரைகளையும் நிகழ்த்தியுள்ளார் இலங்கை வானெலி, கல்வி ஒலிபரப்பில் உயர்தர வகுப்புகளுக்குரிய நூல்களைப்பற்றியும் விரிவுரை ஆற்றியுள்ளார். பாலர் பகுதியிலும் **அவர்** பாடல்கள் ஒலிபரப்பப் பட்டுள்ளன.

இவர் இலங்கையில் உள்ள பிரபல தினசரிப் பத்திரிகைகளாகிய தினகரன், வீரகேசரி, ஈழகேசரி, இந்துசாதனம், ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், சமயக்கட்டுரைகளும், தொடர் கவிதைகளும், குழந்தைக் கவிதைகளும் எழுதியுள்ளார். **இவர் ஒரு சிறந்த குழந்தைக் கவிஞருமா வார்.** பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் **'கவிராயர்'** என்ற புலவர்பட்டத்தைத் தமது சிறப்புப்பாயிரத்தில் (கவிதைப் பூம்பொழில்) வழங்கியுள்ளார்கள். சோமசுந்தரப் புலவர்க்குப் பின்னர் தந்தையாரே பெரும் புலவராகத் திகழ்ந்தார்.

இவர் கல்விப் பொதுத்தராதர (சாதாரண) வகுப்புகளுக்குரிய இலக்கிய சமய பாடப் புத்தகங்களுக்கு உரைகளும் எழுதியுள்ளார். இவர் இயற்றிய நூல்களில் வெளிவந்தவை **கவிதைப் பூம்பொழில்,** யாழ்ப்பாணத்துத் **திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும்** என்பனவாகும. இவர் 1964-ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்க புத்தக வெளியீட்டுச் சபையின் தமிழ்ப்பகுதி உறுப்பினராகவும் கடமையாற்றினர்.

கபிலருக்குப் பாரிவள்ளல் வாய்த்தது போல வேந்தனுர்க்குச் செந்தமிழ்ப் புரவலராகிய ஸ்ரீலங்கா புத்தகசாலை அதிபர் **திரு. தெய்வேந்திரம்பிள்ளை** வாய்த்தனர். அவர்கள் தந்தையார் எழுதிய நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்திச் சன்மானம் வேண்டியவாறு வழங்கி ஊக்கப்படுத்தினர்கள். அதனுல் ஆர்வம் மிகுந்த தந்தையார் பல்வேறு செந்தமிழ் நூல்களை ஆண்டு தோறும் எழுதித் தமிழை வளர்த்தார்கள் திரு. தெய்வேந்திரம்பிள்ளையின் அருமைத் தொடர்பு தந்தையாரின் தமிழாக்கப்பணிக்குப் பேருதவிபுரிந்தென்பது புனைந்துரையன்று.

தந்தையார் எழுதிய சிறந்த நூல்களிற் பல அச்சேருமற் கிடக்கின்றன. அவற்றை அச்சேற்றிப் பாடநூலாக்குதல் தமிழறிஞர் கடனாகும்.

தந்தையாருடைய வாழ்க்கை வரலாற்றைச் செம்மையாக விரித்தெழுதி வெளியிடுங் கருத்துடையேன்.

— செல்வி கலையரசி. வேந்தனர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெ. பொ. மீனுட்சிசுந்தரன் தேதி: 3-10-66.

துணைவேந்தர்,

மதுரைப் பல்கலைக்கழகம்.

வித்துவான் பண்டிதர் சைவப்புலவர் க. வேந்தனர் யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராகத் தொண்டாற்றி வந்தார். தமிழில் பரந்த அறிவும் ஆழ்ந்த பற்றும் கொண்டவர். அவருடைய பேச்சினை நான் கேட்டுள்ளேன். மிக விரைவாக, ஆனல் அழுத்தந் திருத்தமாகப் பேசி மக்கள் உள்ளத்தில் தமிழன்பையும், தமிழ் நூல்களில் தோன்றும் சிறப்பையும் பதியவைக்கும் அவரது பேராற்றலைக் கண்டு நான் மகிழ்ந்துள்ளேன். தமிழ் விழாவில் அவர் ஆற்றிய சொற்பொழிவு இன்றும் என் செவியில் முழங்குகின்றது. பின்னர் நான் பரமேஸ்வரக் கல்லூரிக்குச் சென்றிருந்தபோது அவருடைய ஆசிரியத்தன்மையையும் தமிழ்த் தொண்டினையும் நேரில் அறிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அத்தகையவர் திடீரென மாரடைப்பினுல் காலமாகிவிட்டார் என்பதைக் கேட்டுத் திடுக்கிட்டேன். அவருடைய நினைவு அவருடைய மாணவர் உள்ளத்தில் நிலைத்து நின்று, அவருடைய வழியிலே அவர்கள் சென்று தமிழ்த் தொண்டாற்றி வெற்றி பெறுவார்கள் என்று நினைக்கிறேன். கடவுள் அருள் புரிவாராக!

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. ச. ஞானசம்பந்தன்
தனி அலுவலர்,
தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சித் துறை,
தமிழ்நாட்டு அரசாங்கம்.

(முகாம்) யாழ்ப்பாணம்
2-10-66

இன்று, இந் நாட்டிற்கு வந்தபிறகுதான் என் சிறந்த நண்பருள் ஒருவராகிய கவிஞர் க. வேந்தனார் அவர்களை இழந்துவிட்ட செய்தியை அறிந்தேன். அதனைக் கேள்வியுற்றவுடன் என்மனம் என்னைப்பற்றியே சிந்திக்கத் தொடங்கியது. உண்மையில் நான் அதிர்ஷ்டம் இல்லாதவன் என்றுதான் நினைத்தேன். சென்ற ஆண்டு ஏறத்தாழ இதே காலத்தில் இங்குவந்திருந்த நான் சேர். கந்தையா போன்ற மற்றோர் நண்பரை இழக்க நேரிட்டது.

பல்வேறு துறைகளில் நண்பர் வேந்தனார் அவர்கள் சிறந்து விளங்கியதை நானே கண்டிருக்கிறேன். நுண்மாண் நுழைபுலம் மிக்க அவர் போன்றவர்களின் ஆராய்ச்சித்திறனும், கவிதை, பேச்சுத்திறன்களும், இன்றைய நிலையில் இந்நாட்டிற்கு மிகவும் தேவைப்படுகின்றன. ஆனாலும், நம்முடைய துரதிர்ஷ்டம் நமக்கு மிகவும் தேவையான இந்நேரத்தில் ஆண்டவன் அவர்களைக் கூவி அழைத்துக் கொள்ளுகிறான்.

அறிவுடையார் யாரை இழப்பினும், அதனால் ஏற்படும் நஷ்டம் பெரிதெனினும், சிறந்த ஒரு கவிஞனை இழப்பது மிகப் பெரும் கஷ்டமாகும். தடியெடுத்தவனெல்லாம், தண்டல்காரனாவது போலப் பேனா எடுத்தவர் எல்லாம் கவிஞராகத் திகழ்கின்ற இந்நாளில் வேந்தனாரைப் போன்ற உண்மையான திறன்படைத்த கவிஞரைக் காண்டல் கடினம். நட்புக்கு மிகச்சிறந்தவராய் விளங்கிய அவர் மறைவு குறித்துப் பெரிதும் வருந்துகின்றேன். தவிர்க்க முடியாத இப்பேரிழப்பில் சிக்கித் தவிக்கும் என் நண்பரின் குடும்பத்தார் அனைவரும் தம்துயரத்தை மறந்து ஒரு வழியாக ஆற்றி இருப்பதற்கு இறைவன் திருவருள் புரிவானாக.

திரு. க. வேந்தனார் அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நீழலில் நிலை பெற்று இன்னருள் பெற, இறைவன் திருவருள் பாலிப்பானாக.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வேந்தன்

பரமேஸ்வராக் கல்லூரி.

தமிழ் மணங் கமழ, சைவம் பரிமளிக்க, நாமெல்லாந் தமிழையுஞ் சைவத்தையும் வாழுநெறியிற் கடைப்பிடிக்க எம்மை வழிப்படுத்திய எங்கள் வேந்தனார், இன்று நம்மிடையே யில்லை.

சூன்யம் ஒன்று தமிழ்கூறு நல்லுலகைச் சூழ்ந்துவிட்டது.

கால் நூற்றாண்டு காலத்துக்கு முன்பு, வேலணையில் தாம் சொற்பொழிவாற்றிய கூட்டம் ஒன்றிலே, சொல்லும் பொருளும் தமிழும் நயக்க நன்றியுரை கூறிய இளவேந்தனாரைக் கண்டெடுத்து, பரமேஸ்வரக் கல்லூரி மூலம் தமிழுலகுக்கு அளித்தபெருமை கலாநிதி சு. நடேசபிள்ளை அவர்களைச்சாரும்.

அன்று இளவேந்தாய் எம்மிடை வந்து, பண்டிதராய், வித்துவானாய், சைவப்புலவராகி, ஆசிரியருமாய், ஈழத்தமிழ்நாட்டின் முடிசூடா வேந்தனாராய், கால் நூற்றாண்டு காலந் தமிழ் செய்து தமது கடைசிமூச்சையுந் தமிழாக்கி, தமிழாகிவிட்ட வேந்தனாரைப் பற்றிய நினைவுகள் மக்களிடையே கதையாகி ஈழத்தமிழ் வளர்ச்சி வரலாற்றில் நிரந்தரமான ஓர் இடம் பெறும்.

'தமிழறிஞர் ஒருவரின் சொற்பொழிவு' என்றதுமே சபையினர் எழுந்து வெளிச்செல்லும் ஒரு காலத்திலே, வெளிச்செல்லுஞ் சபையோரின உடல், உள்ளம், உயிர் எல்லாவற்றையும் காந்தமாய்ப்பற்றி இழுத்து, அவர்களைத 'தமிழ்வெறி' கொள்ளச் செய்த இளைஞன், வேந்தனார், ஈழநாட்டிலே இத்துறையில் ஒரு முன்னோடி.

இலக்கியத்தையும், சமயத்தையும் அமிழ்தென இழைத்துக் கேட்போரின் உள்ளத் தூட்டும் விந்தை, இலக்கிய நயங்களை அழகுற மலர்த்திக் காட்டி மனங்களை மயக்கும் மாயம், இலக்கியத்திலே — சமய சாத்திரங்களிலே வரும் நிகழ்ச்சிகளை நகர்த்தி நெஞ்சினை நெகிழவைக்கும் நாவன்மை, பாத்திரங்களை அவரவர் குணகுணங்களோடு கேட்போரின கண்முன்னே நிதரிசனமாகக் கொண்டுவந்து நிறுத்தும் பேராற்றல், கொள்கை—இலட்சியம் என்பனபற்றி மக்களின் மனத்திலே ஆவேசக் கனல் மூள முழங்குஞ் சொல்வளம் எல்லாம் கைவரப் பெற்றவர் வேந்தனார்.

மேடையிலே, தாமே தம்மாற் பேசப்படும் பொருளாகி, வகுப்பறையில் தாமே தம்மாற் கற்பிக்கப்படும் பாடமாகி, தமிழிலும் சைவத்திலும் தம்மை இழந்துவிடுகிற, தாம் ஒன்றிவிடுகிற மேதை எங்கள் வேந்தனார்

ஆழ்ந்த கல்வியறிவோடு, நாவன்மையும் எழுத்துவன்மையும் ஒன்றுகூடல் மிக அரிது. காலமும் இடமும் நோக்கி, வளமிக்க சொற்களைக் கோத்துச் சொன்மாலை செய்யும் பேச்சுத்திறனைப் போலவே. வேந்தனாரின் எழுத்துத் திறனும் எழுத்துலகில் பல துறைகளில் ஒளி செய்தது.

காவியங்களிலும், ஏனைய சாத்திரங்களிலுந் தோய்ந்து, தெளிந்து, வேந்தனார் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், உன்னதமான கற்பனை செறிந்த கவிதைகளாய் வடித்த சொல்லோவியங்களும் கணக்கற்றவை. அவை காலங்கடந்து நிற்கும் பண்பினவாய். அன்னாரின தமிழார்வச் சின்னமாய்நின்று விளங்கும்.

தனித்தும், பாடநூற்சபை உறுப்பினராகவும் வேந்தனார் எழுதிய இலக்கிய, சமயநூல்களும் பாடங்களும் மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் வரப்பிரசாதம் போன்றவை. ஆசிரிய உலகும், மாணவ உலகும் அதற்குச் சான்று பகரும்.

ஈழத்தின் மூலை முடுக்கெங்கும் தமிழை வளர்க்க, வாழ்த்த, ஆராய எடுத்த விழாக்களி லெல்லாம் தமிழ்மொழி புதுமைபொலிய நின்று முழங்கிய வேந்தனாரின் குரல் இன்று ஓய்ந்துவிட்டது.

தமிழுலகம் ஈடுசெய்ய முடியாத ஒரு தமிழறிஞனை இழந்து கண்ணீர்விடுகிறது, ஆயினும், அவ்வறிஞனின் நினைவுகளும், அன்னார் வகுத்த நெறியும் தமிழுலகை வழி நடத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பற்ற கவிஞர்

ச. அம்பிகைபாகன், B. A.
அதிபர், வைத்தீஸ்வர வித்தியாலயம்.

தமது நாவன்மையினுலும் எழுத்துத் திறமையினுலும் கவிதா சக்தியினுலும் தமிழ் அன்னைக்கு அருந்தொண்டாற்றி வந்த வேந்தனுர் மறைவு ஈடு செய்யமுடியாத ஓர் இழப்பாகும். தமிழ் அன்னைக்கு இருந்த அணிகலன்களில் ஒன்று இவர் மறைவினுல் குறைந்து விட்டதாக நாம் கருதவேண்டும்.

வித்துவான் வேந்தனுர் இலக்கணத்திலும், இலக்கியத்திலும் ஒரே தன்மைத்தான புலமை பெற்றிருந்தார். இதற்கு மேலாக, கவிதை புனைவதிலும் வல்லுநராயிருந்தார். இப்படி மூன்று துறைகளிலும் வல்லுநராய் இருப்பவரைக் காண்பதரிது.

இவருடைய இலக்கண இலக்கியப் புலமைக்கு இவர் ஈழநாட்டுப் பெரும் புலவர்களுடன் இலக்கணம் சம்பந்தமாகவும் இலக்கியம் சம்பந்தமாகவும் ஈழகேசரியில் நடத்திய வாதங்கள் எடுத்துக்காட்டாக விளங்கின. கண்ணகியின் கற்பு நிலையை விளக்கி இவர் எழுதிய கட்டுரைகள் மிகச் சிறந்தவை.

வித்துவான் வேந்தனுர் போன்றவர்களுக்கு நமது கல்வி அமைப்பில் தகுதியான இடமில்லாதிருப்பது வருந்தத் தக்கது. கல்விக்கு ஆழமும் அகலமும் தேவை. நமது பரம்பரைக் கல்வியில் ஆழம் இருந்து வருகின்றது. தற்பொழுதைய கல்வியில் அகலமிருக்கின்றது. இது இரண்டும் சேர்ந்தால்தான் கல்வி பூரணமடையும். வித்துவான் வேந்தனுர் போன்றவர்கள் சர்வகலாசாலையில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டிருந்தால் மாணவர்கள் பரம்பரைக் கல்வியினுல் ஏற்படும் நன்மையைப் பெற்றிருப்பார்கள். இந்தியாவில் இது நடைமுறையிலிருந்து வருகின்றது. ஆங்கில அறிவு அற்பமேனும் இல்லாத வித்துவான்கள், புலவர்கள், பேராசிரியராகவும் விரிவுரையாளராகவும் இருந்து வருகின்றனர். இவ்விஷயத்தில் நாமும் இந்தியாவைப் பின்பற்றுவது பயனுடைத்தாகும்.

வித்துவான் வேந்தனுர் புலமையிற் சிறந்திருந்தபோதும், அவரெழுதிய கவிதைகள் மூலம் சிரஞ்சீவியாக வாழ்வார் என்பது எனது நம்பிக்கை. வித்துவான் வேந்தனுர் அவர்கள் எழுதிய "அம்மாவின் அன்பு" என்னும் கவிதையை முதன் முதலில் நான் படித்தபொழுது அடைந்த இன்பம் சொல்லிற் கூறி அடங்காது. இந்தக் கவிதையைப் பாரதியாரின் "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா" என்னும் கவிதைக்கு ஓரளவு ஒப்பிடலாம். வேந்தனுரின் கவிதை பாரதியாரின் கவிதையிலும் எளிமையாயிருக்கின்றது.

> "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
> சொற் கேட்டல் இன்பம் செவிக்கு"

என்னும் வள்ளுவர் கருத்தைக் காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா" என்னும் முதற் செய்யுளிலும் "பாப்பா பாட்டை நானும் பாடி ஆடும் போது" என்னும் கடைசிச் செய்யுளிலும் நன்றாகக் காட்டியுள்ளார். பிள்ளையை அலங்கரிப்பதில் அன்னை காணும் இன்பத்தைப் "புழுதி துடைத்து", என்னும் இரண்டாம் செய்யுளிலும், பிள்ளை செய்யும் குறும்புகளிலும் தாய் இன்பத்தைக் காணுகிறுள் என்பதை "அள்ளிப் பொருளைக் கொட்டி" என்னும் மூன்ரும் செய்யுளிலும் விளக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஈழநாடு" அஞ்சலி

தமிழறிஞர் வேந்தனார் அவர்களின் திடீர்மறைவு, தமிழ் கூறும் நல்லுலகுக்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பாகும். பேச்சிலும் எழுத்திலும் ஒரு வேந்தனாகவே இருந்த அவர், தமிழறிவே சிறிது மற்ற என்பால் மிக அன்புகாட்டிவந்ததை மறக்கமுடியாது. "ஈழநாடு" பத்திரிகையில் பல அரிய இலக்கியக் கட்டுரைகளை எழுதித் தொண்டாற்றிய அவ்வறிஞருக்கு, அப்பத்திரிகையின் சார்பாகவும், அதன் வாசக அன்பர்களின் பெயராலும் எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈழநாடு.
2-10-66.

*கி. பி. அரன்*

---

யுள்ளார். நான்காம் செய்யுள் தாயின் வாஞ்சையை மிகச் சிறப்பாகக் காட்டுகின்றது. பள்ளிக்கூடம் விடுகின்ற நேரத்தைத் தாய் பார்த்தபடியே இருக்கின்றாள். பள்ளிக்கூடம் விட்டு, பிள்ளை வீடுவரும் வரையும் அவளால் பொறுத்திருக்க முடியவில்லை. பாதித்தூரம் சென்று பிள்ளையைத் தூக்கிச் செல்கின்றாள். இவ்வாறு தாயன்பை நன்கு வெளிப்படுத்தும் பாவம் நிறைந்த அக்கவிதையை இங்கு கொடுத்துக்கட்டுரையை முடிப்போம்.

(1) காலைத்தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக்காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா

(2) புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்
பூவுஞ் சூட்டும் அம்மா
அழுது விழுந்தபோதும் என்னை
அணைத்துத் தாங்கும் அம்மா

(3) அள்ளிப் பொருளைக் கொட்டிச்சிந்தி
அழிவு செய்த போதும்
பிள்ளைக் குணத்தில் செய்தான் என்று
பொறுத்துக் கொள்ளும் அம்மா

(4) பள்ளிக்கூடம் விட்டநேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித்
தோளிற் போடும் அம்மா

(5) பாப்பா மலர்ப் பாட்டை நானும்
பாடி ஆடும் போது
வாப்பா இங்கே வாடா என்று
வாரித் தூக்கும் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு பின்னேரம்

பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை

இரண்டொரு வருடத்துக்குமுன் ஒரு நாட் பின்னேரம் வித்துவான் வேந்தனர் அவர்கள் அச்சு நடந்துகொண்டிருப்பதொரு புத்தகத் துடன் காட்சியளித்தார்கள். புத்தகம் வேந் தனர் பாடிய பாடல்களின் தொகுதி.

இப்பாடல்களை ஒரு முறை பாருங்கள் என்ருர்; நான் படியுங்கள் என்றேன். எனக்கும் கண்ணின் ஒத்துழைப்பு அப் பொழுதின்மையினுல் அப்படிச் சொன்னேன். வேந்தனர் படிக்கத் தொடங்கினர். நான் தொடக்கத்திற் பராமுகமாகக் கேட்டேன். ஆனல், மெல்ல மெலலப் பாட்டுக்கள் என னைத் தம்வயப்படுத்தத் தொடங்கிவிட்டன. அதனுலே, படியுங்கள்; உங்களுக்கு இனி யன வென்றுபட்ட பாடல்கள் அத்தனை யையும் படியுங்கள் என்று சொல்லத் தொடங்கிவிட்டேன். பாடல்கள் முற்றுப்பெற வில்லை. அடுத்தநாள் பின்னேரமும் படிப்புத் தொடர்ந்து நடந்தது.

பாட்டுக்கள் உரிய உரிய மெய்ப்பாடுகளை என்பால் வருவித்தன. நான் என்னை யறி யாமலே குதூகலித்தேன். குழந்தைகளுக் கென்று பாடிய பாட்டிப் பாடல்கள் சொல் லுந்தரமல்ல; உயர்தரமானவை.

சோமசுந்தரப்புலவர் அவர்களின் பாடல் களை எவ்வாறு சுவைத்தேனே அவ்வாறே வேந்தனரின் பாடல்களையுஞ் சுவைத்தேன். அந்தமுறையில் ஒரு விமரிசனமும் எழுதி னேன். சோமசுந்தரப் புலவருக்குப் பின்பு வேந்தனர் என்று வாழ்த்துச் சொன்னேன்.

இரண்டு பின்னேரமும் முன்னும் பின்னுஞ் சம்பாஷணையும் நடந்ததுண்டு. அதனுலே, இளமைக் கால வேந்தனரல்லர் இப்பொழு தைய வேந்தனர் என்பது நன்கு தெரிந்தது. பாடபுத்தகங்கள் எழுதநேர்ந்ததனுலே, திரு வருட்பயன் முதலிய அருணூல்கள், வேந் தனரின் இளமைக் கொள்கைகளைப் பெரிதும் மாற்றமடையச் செய்துவிட்டன.

வேந்தனர் வெறுந் தனித்தமிழ் வேந்தன ரல்லர்; சைவத்தமிழ்ப் பெருவேந்தனர் என்று என் உள்ளஞ் செப்பியது.

இந்நிலையில் வேந்தனரின் பிரிவு உள்ளப் பிரிவு.

> "உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
> அனைத்தே புலவர் தொழில்"

*கலாசாலை வீதி*
*திருநெல்வேலி 29-9-66*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லுக்குத் தனிவேந்தன்

*வித்துவான் பொன். முத்துக்குமாரு.*
ஆசிரியர் வைத்தீஸ்வர வித்தியாலயம்

### ஆசிரிய விருத்தம்

1. வில்லுக்கு நிகரற்ற வீரனவன் யாரென்னின்
விஜய னாகும்
மல்லுக்குப் பிறரொவ்வா மதிப்புடையோன் வீமனெனும்
வலியோ னாகும்
எல்லுக்கு நாமறிய இணையற்ற திரவியதே
இவ்வா றாயின்
சொல்லுக்குத் தனிவேந்தன் நீயென்று சொல்வதுவும்
தோஷ மாமோ?

2. நக்கீரர் முதற்சங்கப் புலவோர்கள் நவின்றபெரு
நயஞ்சேர் பாடல்
மிக்காய்ந்து நினதுமதி நுணுக்கத்தால் விளங்குபொருள்
விரும்பிக் கண்டு
தக்கோர்கள் பொருந்தவையில் விரித்துரைக்கும் தமிழ்ப்புல
தரணி தன்னில் [வோ்ய்
எக்காலும் நினைப்போல இனியதமிழ் எடுத்துரைப்பார்
இருந்தார் உண்டோ?

3. சொல்லில்வரு சுவையுணர்ந்தோம் தூய்மைபெறு பொருட்
துய்த்தின் புற்றோம் [சுவையும்
பல்விதமா யுளவான உணர்ச்சிகளாற் பரவசமாம்
பண்பும் கண்டோம்
எல்லவரும் விரும்பிடுநின் இனிமைதவழ் சொல்லமிழ்தை
என்று காண்போம்
நல்லவர்கள் தமிழறிவில் வல்லவர்கள் நைந்துருக
நடந்தாய் நன்றே?

4. குதலைமொழிச் சிறுவர்களும் குதுகலித்துக் கேட்டின்பங்
கொள்ளத் துள்ள
இதமுறுசொல் லெளியனகொண் டினிமைமிக வேசேர
இணையின் றாக
விதவிதமாய்த் தெள்ளுகவி பள்ளிசெலும் பிள்ளைகளுக்
கள்ளி யீந்தாய்
புதுமைதெரி புலவர்தமில் நினைப்போலார் புவனிதனில்
புகழ்பெற் றாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தக்கபொருள் மிக்கதுலைத் தட்டுகனம் உற்றுநனி
தாழ்தல் போலத்
தொக்கபல லக்கணமும் மெச்சிடுபல் லிலக்கியமும்
தோய்ந்து தோய்ந்து
சிக்கலறக் கற்றினிது பெற்றவறி வுற்றகனம்
சேர்ந்து நீயும்
எக்கணமும் கற்றவர்முன் இச்சையொட டக்கமுறும்
ஏற்றம் பூண்டாய்.

6. சிந்தித்துத் தெளிந்தவொரு சீரியநற் கருத்தினைநீ
செப்புங் காலை
வந்தித்து மகிழ்ந்தேற்றுப் பயனுணர்ந்து பாராட்டு
வழங்க லின்றி
நிந்தித்து மறுத்திடினும் நீதளர்தல் செய்யாது
நிறுவு கிற்பாய்
புந்திக்குள் களங்கமது பொருந்தாதாய் புன்முறுவல்
பூத்து வெல்வோய்.

கட்டளைக் கலித்துறை

7. மெய்ப்புகழ் நற்குண வேந்தன் தணந்துவிண் மேவியதால்
ஒப்புயர் வற்றிடு தந்தை இழந்தனர் ஒண்புதல்வர்
செப்பரு நன்மனை தெய்வம் இழந்தனள் செந்தமிழாம்
திப்பிய நங்கைதன் சீர்த்தவச் சேயை இழந்தனளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் வேந்தனர்

*நவாலியூர் சோ. நடராசன்,*

1942இல் காஞ்சி வச்சிரவேலு முதலியார் இலங்கைக்கு வந்தபோது கொழும்பிலே என்னேடு இரண்டு வாரந் தங்கியிருந்தார். அவர் இலங்கையில் பலதிசையுஞ் சென்று சைவசித்தாந்த சம்பிரதாயத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றிவந்தார். கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலிய பல இடங்களுக்குஞ் சென்று சித்தாந்த விளக்கம் செய்தார். அவருடைய திக்குவிஜயம் முடிந்து கொழும்பு திரும்பிய பின்னர் ஒருநாள் அவர் சாவகாசமாக என்னேடு பேசிக்கொண்டிருக்கையில் நான்கேட்டேன் "இலங்கையிலே சைவசித்தாந்த சாத்திரத்தை நன்கு அறிந்துகொண்டவர்கள் வரிசையில் நீங்கள் யாரைச் சிறப்பாகக் குறிப்பிடுவீர்கள்?" அதற்கு அவர் முகமலர்ச்சியோடு, ஆர்வமும் அற்புதமும் நிறைந்த முகபாவத்தோடு "யாழ்ப்பாணத்திலே ஒருவரைக் கண்டேன். வயதால் மிக இளையவர்; சைவசித்தாந்தத்தை விளக்குவதில் அவருக்கு இணையானவர் வெகு சிலரே. இந்தியாவிலும் இத்தகைய அறிஞரைக் காண்பது அபூர்வம்" என்ருர். அவர் யார் எனக் கேட்டேன். "அவருக்கு வேந்தனர் எனறு பெயர்" என்ருர்.

வச்சிர வேலுமுதலியார் பூசையில் அமர்ந்தால் மூன்றுமணிநேரமாவது செல்லும் பூசையை முடிக்க. அவர் பூசை செய்யும் உடையவருக்கு அபிடேகஞ் செய்த தீர்த்தம் அறையைக் கடந்து வெளியே சிற்றருவியாகப் பாயும். அவருடைய கண்ணில் நீர் போல.

"அவர் சித்தாந்த அறிஞர் மாத்திரமல்லர்; இந்நாட்டு இளங்கவிஞர்களுள் தலைசிறந்தவர்: என்னரும் பெறற்றந்தையாரின் மாதுரியம் அவரிடத்தும் பெரிதும் உண்டு. வருங்காலத்தில் அவர் நம் நாட்டின் மதித்தற்குரிய செல்வமாவார்" என்ற ஒரு கருத்தையும் அவரிடம் அப்போது கூறியதாக ஞாபகம். வேந்தனர்க்கு அப்போது 25 வயதிருக்கும் என நினைக்கின்றேன்.

பத்திரிகைகளில் அவருடைய கவிதைகள் வந்தால் தேடிப்படித்து இன்படைவேன். அவருடைய கவித்துவ சக்தியைக்கண்டு நான் அக்காலத்திலே பொருமைகொள்வதுமுண்டு. பின்னர் மனத்தால் வணக்கஞ் செலுத்தி வாயார வாழ்த்துவதுமுண்டு. என்னேடு அதிகம் பேசமாட்டார். பேசினல் நயமாகவே பேசுவார். மற்றவரிடத்துள்ள ஆற்றலை மதிக்கும் பண்பு நிறைய உடையவர்.

1963இல் என்று நினைக்கிறேன். கீரிமலையிலே ஒரு கூட்டத்தில் அவருக்கு, "சைவசித்தாந்த சிரோமணி" என்ற விருதை வழங்கிப் பொன்னுடை போர்த்தினர். அந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்த காரியதரிசி என்னிடம் வந்து "நீங்களே இந்தக் கைங்கரியத்தைச் செய்ய வேண்டும்" என்ருர். "பெரியார் பலர் இருக்க என்னை ஏன் கேட்கிறீர்கள்" என்றேன். "வித்துவான் வேந்தனருடைய விருப்பம் அது" என்ருர். இஃது அவரிடத்துள்ள மற்றோர் பண்புபோலும். அன்று அவர் அடைந்த இறும்பூது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பெரியவனாக்கிவிட்டது. ஒரு கணமாவது.

சிலமாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலே எனக்கொரு பாராட்டுக் கூட்டம் நடந்தது. "பூவை விடு தூதை"க் கையிலே எடுத்துக்கொண்டு வந்தார். பேரவையில் விமரிசன அருவிமடைதிறந்து பாய்ந்தது. ஈற்றில் இந்தச் சோவன்னாவுக்கு எத்தனை பெண்கள் தெரியுமா? தமிழ்ப் பெண்ணொருத்தி, ஆரியப் பெண்ணொருத்தி; ஆங்கிலப் பெண்ணொன்று இப்போது சிங்கள மாதையும், வங்கத்து மங்கை ஒருத்தியையுஞ் சேர்த்துக் கொண்டார். ஸ்பானியக் கவிமகளாம், இத்தாலியக் கதைச் செல்வியாம், அரபுநாட்டு வனிதையாம் என்று அடுக்கிக் கொண்டே போனார். ஆசியத்துக்கும் அன்புக்கும் எல்லையில்லை அவருடைய அம்பறாத்துணியில்.

இங்கேயும் வேறுநாடுகளிலும் பல பேச்சாளருடைய சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கிறேன். ஆங்கிலத்தில் ஜி. ஜி; ராதாகிருஷ்ணன், சேர். சி. பி, பண்டாரநாயகா, சாஸ்திரி என்று அடுக்கிக் கொண்டுபோகலாம்; தமிழிலே சீ. ஆர், ம. போ. சி, அண்ணாத்துரை என்றெல்லாம் சொல்லலாம். இவர்கள் வரிசையில் வேந்தனாரும் சேருவார்; ஆனால் ஒன்று; செந்தமிழ்ச் சொல்வளம் கொழித்துக் கொண்டிருக்கும் வேந்தனாருடைய பேச்சில்; கவிதையின் சாயல் படிந்துகொண்டிருக்கும்; சொற்களைப் பொருளின் தாற்பரியமறிந்து இட்டுக்கொண்டே செல்வார். இலக்கியமா, இலக்கணமா, சமூகக் குறைபாடுகளா, தமிழனின் அபிலாஷைகளா, சாத்திரமா, தோத்திரமா எல்லாம் அவருடைய பேச்சிலே புதிய ஒளி பெறும். சிறுவர்க்குச் செந்தமிழ்க் கவிதை; முதியோர்க்கு நம் சமூக அனுபவங்கள் எல்லாம் வெளிவரும். நான் என்னத்தைக் கண்டேன். தேசத்துக்கு விளக்கானவர். பேசப் பெரிதுமினியவர். அவர் நினைவு நிலைப்பதாக.

---

# தனித்தமிழ் வேந்தனர்

— வேலணைத்தீவு —

சொல்வளமும் ஓசை நயமும் ஒன்றினென்று விஞ்சத் தூயதமிழில் அருமைப்பாக்கள் ஆயிரமாயிரமாக எளிமையிற் புனைந்து ஒப்பாவார் எவருமின்றி மேல் நின்றவர் வேந்தனர்—**வித்துவான் வேந்தனர்.**

உள்ளங் கனிந்தெழ, அழகொழுகுந் தென் தமிழ்ச் சொற்கள் மடையுடைத்துப் பாயும் வெள்ளமெனப் பெருக்கெடுகக, கேட்டாரைத் தன்வழியில் ஈர்த்துச் செல்லும் ஆற்றலும் விறுங்கொண்டது வேந்தனர் பேச்சு—**மேடைப்பேச்சு.**

தேனினும் அமுதினும் திங்கரும்புத் தேறலினும் இனிமை மிக்கதாய தமிழின்பத்தை அலலும் பகலும் ஆரத்துய்த்துத் தேக்கெறிதற்கு ஏற்புடைத்தாக, ஒருதலைப்பட்டு ஒன்றி நிற்கும் இயலபமை பொறிகளும் புலன்களும் அந்தக்சரணங்களும் ஒருங்கு வாய்க்கும் பெரும்பேற்றினர் புலவர் வேந்தனர்—**பெரும்பேற் றெருவர் புலவனர்.**

தன்னேரில்லாத் தமிழின் இனிமைப் பெருங்கடலில், கனவினும் நனவினும் அழுந்தித் திளைத்துச் செம்மாந்த வேந்தனர் தாமின்புறுவது உலகின்புறக் கண்டுவததற்கு வரையாது வாரி வழங்கிய வள்ளன்மை, தெய்வத் தமிழுக்கு ஆற்றிய திருப்பணி தனிப் பெருஞ் சிறப்பினது—**நினைதோறும் இனிமை சொட்டுவது.**

வேலணைத்தீவில். தொன்மை மறவா வேளாண்குடிமக்கள் மிக்க சரவணையூர், வேந்தனர் தோன்றிய ஊர். அயலிலுள்ள, சிவநெறி பேணிய வேலணை மேற்கூர், அவர் மனையற நெறியில் விழைந்துபுக்க ஊர். அவர்தம் பிள்ளைப் பெயர் நாகேந்திரம்பிள்ளை—**பிள்ளை மரபுப் பிள்ளை.**

இளமையிலேயே தமிழின் சுவைவழிப்பட்டமையால் எண் என்னும் நுண்ணணங்கு இவரோடுடி. இசலி. ஒளித்து நின்று விளைத்தகலாம் சொல்லுந்தரத்ததன்று. நிலைதளராது எதிர்த்து நின்று. தனிவழிகண்டு, தமிழினினிமையாலேயே அதைப் புறக்கிடச் செய்து வென்றிக்கொடி உயர்த்தியவர் வேந்தனர்—**வித்தகர் வேந்தனர்.**

வேந்தனரின் பேச்சு மூச்செல்லாம் தமிழ். கனவு நனவெல்லாம் தமிழ். உள்ளம் உயிரெல்லாந் தமிழ். அவர் வாழ்வு தமிழ். தமிழே அவர்; அவரேதமிழ்.—**தனித்தமிழ்.**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அறிவுச்சுடர் மறைந்தது

நவாலியூர் - சோ. இளமுருகனுர்

[தலைவர் - தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்]

வேலணையூர்ப் புலவர் வேந்தனுர் இவ்வுலக வாழ்வை நீத்து, இறைவனடி சேர்ந்தமையைக் கேட்டு யாமும், எம் மனைவிமக்களும், உடன்பிறந்தாரும் ஆருத்துயரம் அடையலானேம். எம்மைப்போலவே, பல்லாயிரவர் துயர்க்கடலில் அமிழ்ந்தினர் என்பது புனைவன்று.

வேந்தனுர் நுண்மதிபடைத்தவர். தமது இளமைப்பருவந் தொட்டுத் தமிழ்ப்பற்றும் சைவப்பற்றுங் கொண்டு, சங்கநூல்களையும் திருவாசகம் பெரியபுராணம் முதலிய திருமுறைகளையும் துருவிக் கற்றுப் புலமையெய்தியவர். ஆங்கிலங் கற்ருேர் தமிழைக் குறைத்துப் பேச நேர்ந்த விடங்களிலெல்லாம், ஆண்மையும் ஆர்வமுங்கொண்டு தமிழின் அருமை பெருமைகளை விளக்கிச் சொற்போர் புரிந்து வெற்றியீட்டியதை யாம் நேரே கண்டு வியப்புற்றேம்.

வேந்தனுரின் பதினுரும் அகவைப் பருவத்தில், யாம் வேலணையிலுள்ள சைவக்கழகத்தில் விரிவுரை செய்யச் சென்றிருந்தோம். எம்முரை முடிந்ததும், வேந்தனுர் எழுந்து எமக்கு நன்றியுரை வழங்கினுர். அவருடைய இனிய செந்தமிழ்ப் பேச்சு எம்மைக் கொள்ளைகொண்டது. அவர் அத்துணையிளமையிற் பிறமொழிச் சொற்கலவாது தனித்தமிழிற் பேசினுராதலின், எம்மைப்போலவே தம்பெயரையுந் தனித்தமிழில் வழங்கவேண்டுமென்று வற்புறுத்தினேம். நாகேந்திரன் என்பதில் இந்திரன் என்ற சொல்லிருத்தலினுல், வேந்தனுர் என்று வழங்கலாம் என்றும், அப்பெயர் பழைய தொல்காப்பியத்தில் ஆளப்பட்டதென்றும் கூறினேம். அவர் அவ்வாறே தம்மை வேந்தனுராக வழங்கலாயினர். இக்காலத் தமிழ் அறிஞர்க்கெல்லாம் அவர் வேந்தனுகவே விளங்கினுர். அடுத்த பிறப்பிலும் தமிழகத்திற் பிறந்து கலைவேந்தனுக விளங்க அருள் செய்ய வேண்டுமென்று கலைப்பெருமாட்டியை வழுத்துகின்றேம்.

தமிழகத்துப் பல்லாவரத்தில் எழுந்து, அறிவொளிவீசிய செந்தமிழ் ஞாயிருகும் மறைமலையடிகள், இலக்கண நெறிக்கமைய எழுதும் செந்தமிழ் வழக்காகிய தனித்தமிழியக்கத்தைத் தொடங்கி வளர்த்து வளம்படுத்திய காலத்திலே, யாமும் அடிகளார் கொள்கையில் ஈடுபட்டு யாழ்ப்பாணத்திலும் அதனைப் பரப்பப் பெரிதும் முயன்றேம். முயன்றேமுக்குக் கர்வலராக மாவைக்கவுணியன் வெண்ணெய்க்கண்ணனுர் அமர்ந்து, ஊக்கந் தந்தருளினுர். எமது இயக்கம் அரும்பிய காலத்தில், அறிஞர் சரவணனுர்

முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பியார், பண்டிதர் தில்லைநாதன், அறிஞர் மதியாபரணன், வழக்கறிஞர் நாகலிங்கம், அறிஞர் செ. யோ. இளையதம்பி, உரைநூற்புலவர் ந. சி. கந்தையபிள்ளை, வேந்தனார், சேதுகாவலனார், கடவுள் சுப்பிரமணியம் என்போர் எம்மைப் போலவே அதில் நம்பிக்கையும் உறுதியும் பூண்டு எமக்குப் பேராதரவு நல்கலாயினர். வேந்தனார் உரையாலும் எழுத்தாலும் அவ்வியக்கத்தை நன்று வளர்த்தவர். எமக்கு வலக்கைபோல நின்று பேருதவிபுரிந்தவர்! இன்றைக்கு அந்த அறிவுச் சுடர் எங்கே? தனித்தமிழ் எழுதுவதில் ஒப்பில்லா அவர் திருக்கரம் கற்பகம் புகுந்துகொண்டதோ!! ஒப்பற்ற செந்தமிழ்ச் சுடரை - எமக்குத் துணையான உடன்பிறப்பை - மாணிக்கமலையை - என்னருமை மாணுக்கனை இன்று இழந்து பேரஞர் அடைகின்றேம்!! அந்தோ! கூற்றுவன் கொடியவன்! இனிச் செந்தமிழ் மரபெங்கே!! தீந்தமிழ்ப் பாட்டெங்கே!!

மறைமலையடிகளாரின் இயக்கத்தைச் செம்மையாகக் கடைப்பிடித்தவர் வேந்தனார் ஒருவரேயாவர். இதனை யாம் எல்லேமும் ஒன்றுபட்டுப் பரப்பாது விட்டிருப்போமேல், இன்று யாழ்ப்பாணத்தின் உரைநடைவழக்குக் கொடுந்தமிழாகியிருந்திருக்கும் என்பது புனைவாகாது.

வேந்தனார் தற்புகழ்ச்சியில்லாதவர். குழந்தையுள்ளம் படைத்தவர். கற்பனை வளமுடைய செஞ்சொற்புலவர். தமிழறியாதார் கொடுக்கும் பட்டங்களையும் பட்டாடைகளையும் ஏற்காதவர். தமிழை விற்றுத் தம்மை விளம்பரஞ் செய்யாதவர். நிலையான செந்தமிழ்க் கொள்கையுடையவர். அவருடைய எற்புத்துளை தொறுமுள்ள மச்சைகளிலே தனித்தமிழுணர்ச்சியூற்றெடுத்தோடும். சுன்னைக் குமாரசுவாமிப் புலவர்க்குப் பின்னே தமிழ்வரம்பை அழிக்காது பாதுகாத்த ஒரேயொருவர் இருப்பின் அவரே வேந்தனார் என்று ஆணையிட்டுக் கூறலாம்.

அவரைப் பிரிந்து கலங்கும் அருமை மனைவிக்கும், பிள்ளைகட்கும் எம்பெருமான் ஆறுதல் கொடுப்பாராக!!

ஆசிரியப்பா

நயனில் கூற்றே!! நயனில் கூற்றே!!
பயனறி புலமைப் பண்டிதக் கனியின்
சுவைத்திற மறியாது பறித்தெறிந் தனையே
அவலக் கவலையிற் கையற் றேமால்
கொடுமையின் கொடுமுடி படுதுயர்ப் பெருங்கடல்
நீயே யாதலின் நின்னைத் தப்புநர்க்
காண்ட லரிதம்ம கருதுமுக் கனியும்
சேண்டரு வமுதுந் தேனொடு பாலும்
நன்றுகலந் தட்ட துன்றுசுவைப் பாகினும்
கன்றிய வினிக்குங் கருத்துறு பேச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேந்தன் நாவில் விதமுறக் கேட்டும்
வசியப் பட்டிலே வன்மனக் கூற்றே!!
கசியா வுள்ளம் யாண்டுப் பெற்றனை
ஐயநீ,
பூத யாக்கையிற் பிரித்தனை மேதகு
சாதல் காணுத் தனிப்புக ழாக்கையைப்
பிரிக்கவும் வல்லையோ வுருக்கமில் கூற்றே!!
ஐயகோ!,
முகில்வளர் கூந்தல் முகமதி மண்டிலம்
பகல்கண் டாங்குநல் லொளிநனி யிழப்ப
அம்மதி நின்றே யமுதநீர் பொழிந்தெனச்
செம்மலர்க் கண்க ளருவிநீர் சிந்தக்
காமரு கைவளைத் தாமரைக் கைத்தலம்
சென்னியிற் கூம்பிக் கம்பிதங் காட்டத்
தழலிடைப் பட்டாள் போலத் தரைமிசை
அழுதனள் அரற்றினள் தொழுதன ளாகிக்
கொளுகொம் பில்லாக் கொடிப்போ லூசல்
ஆடினள் கிடந்த அருந்ததி யனையாள்
சவுந்த நாயகி யெனும்பெய ராட்டியின்
பாடறி வில்லாப் படுதுயர் கண்டும்
கருணை யூறாக் கன்மனக் கூற்றே!!
பண்டைத் தண்டமிழ்ச் சங்கத் தெழுந்த
அன்பி னைந்திணைச் செம்பொருள் கற்றறி
ஆராக் காத லன்பின்
தீராக் கெழுமை தெரிதரற் பொருட்டே

[இது தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தின் சார்பாக எழுதப்பட்டது.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயாது தமிழ்ப்பணி புரிந்தார்

பண்டித வித்துவான் க. கி. நடராஜன் B. O. L., Dip. Ed.

"நெருந லுளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

வித்துவான் பண்டிதர் சைவப்புலவர் க. வேந்தனார் அவர்கள் என அரிய நண்பர். அவர்தந் திடீர்மரணம் எனக்குப் பேரதிர்ச்சியை உண்டுபண்ணிற்று. இன்னும் பல ஆண்டுகளுக்கு உயிரோடிருந்து தமிழ்ப்பணி புரிவார் எனறு எதிர்பார்த்திருந்தேன். காலன் அவரை அகாலத்திற் கவர்ந்து விட்டான். அவன் அவரைக் கவர்ந்து சென்ருலும் அவர் எத்தனையோ நண்பர்களது எண்ணகத்தே வளர்கின்ருர், அவர்தம் பூதவுடல் போய்விட்டாலும் புகழுடம்பு என்றும் நின்று நிலவும். அவர் வாழ்ந்த சில ஆண்டுகளில ஓயாது தமிழ்ப்பணி புரிந்தார்; தூய செந்தமிழைப் பாட்டாலும், உரையாலும், பேச்சாலும், என மூச்சாலும் பேணி வளர்த்துவந்தார்.

வித்துவான் வேந்தனார் உணர்ச்சி ததும்ப ஒலிபரப்பி குமுறச் சொற்பஞ்சம இல்லாமற் பேசும் ஒரு துடுக்கான பேச்சாளர். அவர் சொற்பொழிவுகள் இலக்கியத்துறை, அரசியல்துறை, சமயத்துறை யாகிய பல துறைகளில் அமைந்தன. கடைசியாக, அவர் எம் அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்திற் பேசக்கேட்டேன். அது நேற்று நிகழ்ந்தது போல் இருக்கிறது.

அவர் எழுத்தாளர்களில் ஒருவர்; காரசாரமாக எழுதுவார். பலபள்ளிக்கூடப் பாடபுத்தகங்களுக்கு உரை எழுதியுள்ளார். அவர்தம் உரை மாணவர்களாற் பெரிதும் விரும்பப் படுபவை. ஆராய்ச்சிக் கட்டுரைகளும் பல எழுதியுள்ளார். எம் சிவதொண்டன இதழில் "மூவர் தமிழ் விருந்து" என்னும் பொருள் பற்றித் தொடர்ந்து எழுதிவந்தார். அது நிறைவெய்துதற்கு முன்பே அவர் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்.

அவர்தம் பாடல்கள் மிக இனியவை. படித்தவர் முதல் பாமரரும் விரும்பும் பாக்கள் பல அவராற் பாடப்பட்டுள்ளன. பாலர்க்கு கந்த எளிய நடையிற் பாடப்பெற்ற பாக்களும் பல. சொன்னயம் பொருணயம் வாய்ந்த அவர்தம் பாடல்களைத் தொகுத்துக் "கவிதைப் பூம்பொழில்" என்னும் பெயரோடு வெளியிட்டுள்ளார்கள். குயில் கூவ, மயில் ஆட, மல்லிகையும் முல்லையும் மணம்பரப்பி மலர, கிளிகள் மழலைமிழற்ற, நதியும் மலையுங் குளிர்தூங்க, குழந்தைகள் பாடி யாட, அணியொடு பொருந்தும் ஒருதண்டமிழ்ப் பூம்பொழிலாகவே அது விளங்குகின்றது. அதன் கடைசிப் பகுதியிலுள்ள உணர்ச்சி யூற்றெடுத்தோடும் தமிழ்நாட்டுப் பெருமை படிப்பவர் மனத்தைக் கொள்ளை கொள்ளுந் தரத்தது. வேந்தனார் அவர்களின் தமிழறிவுக்குந் தமிழ்ப் பற்றுக்கும் இதனைவிட வேறென்ன எடுத்துக்காட்டு வேண்டும்? ஆறுவேகமாகப் பாய்வது போல வீறுகொண்டு செல்லும் சொல்லடுக்கும் மிடுக்கும் படிப்போர் உள்ளங்களைக் கவர்வன. புறநானூற்றுக்காலப் புலவர்களும், வீரமன்னர்களும், மேம்பாடு மிக்க மறக்குடி மங்கையரும் எம் கண்முன் காட்சியளிக்கின்றனர்.

வித்துவான் வேந்தனார் அவர்கள் திருநெல்வேலிப் பரமேசுவரக் கல்லூரியிற் பல்லாண்டுகளாகத் தமிழ்விரைவுரையாளராக இருந்து மாணவர் மகிழ ஆற்றிய தமிழ்ப்பணி யாவராலும் போற்றப்படுவதாகும். பாடபுத்தகக் குழுவினருள்ளும் ஒருவராக இருந்து அவர் செய்துவந்த பணிகள் பல. கடைசிவரையும் அவர் ஒரு மாணவராக இருந்தார்.

இவ்வாறு பேச்சும் எழுத்தும் பாட்டும் ஒருங்கே வல்ல பண்டிதர்கள மிகச் சிலரே எனறு கூறலாம். நல்லாசிரியனுய், நற்றமிழ்ப் புலவனுய் விளங்கிய அவர் தந்த மக்களும் தமிழாற்றல் மிகுந்தவர்களாகத் திகழ்கினறனர். தமிழுலகம் திரு. வேந்தனாரை இழந்தது. அது பேரிழப்பாகும். அவர்தங் குடும்பத்தாருக்கு ஏற்பட்ட இழப்புக் கூறுந் தரத்ததனறு. வெண்ணெய் திரண்டு வரும் போது, தாழி உடைந்ததுபோன்ற பிரிவு அவர்பிரிவு. அவர் குடும்பத்தார்க்கு என் மனமார்ந்த அநுதாபம் உரித்தாகுக. இறைவன அவர்களுக்கு அருள்பாலிப்பாராக.

யாம் ஓர் அரிய நண்பரை இழந்தோம். ஓயாது தமிழ்ப்பணி புரிந்த அவரைத் தமிழ் மக்கள் மறக்கமுடியுமா? அவர்தம் ஆன்மா சாந்தியடைக. வாழ்க அவர் நற்பணிகள். வாழ்க அவர் திருநாமம்; வாழ்க தமிழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை மேற்கு
## சைவத் தமிழறிஞர் ச. மகாலிங்கம்
## அவர்கள் சொல்லிய

### வெண்பா ஐந்து

1. என்னுள்ளத் தேயகலா தென்றுமுளர் வேந்தனார்
பின்னிறந்தா னென்றுஒன்று பேசுவதென் — என்னுள்ளம்
விட்டகலா நண்பராம் வேந்தன் இறந்தகதை
பட்டபொழு தென்பதுபோல் பார்.

2. "கற்ப இனியமையும்" கண்டதிரு வாசகத்தை
அற்பகலா யுன்னுவதே யல்லாமல் — சொற்புகல
மாட்டாதென் சிந்தை மருவும்உடல் பொய்யுறவு
காட்டினார் வேந்தனார் காண்.

3. இச்சகத்தில் எங்கெங்கும் எம்மிலங்கா அச்சகத்தும்
மெச்சித் தெரிசனஞ்செய் வேளையெல்லாம் — இச்சையுடன்
தேவைப் புனைபாடல் செய்துயரக் கூறுமதி
யே, வேந்தன் சொன்ன தெனக்கு.

4. பதிநன்மை யாலுயர்ந்த பாரியொடு மிக்க
மதிநன்மை யாலுயரும் மக்கள் — விதிநன்மை
இவ்வளவேர் என்செய்வேம் என்றலற வேந்தனார்
எவ்விதமோ தேற்றகிலார் என்.

5. திங்கள் புரட்டாதி தேதி யிரண்டலரி
தங்கு வளர்பாற் சதுர்த்தியே — இங்கு
தமிழறிவன் வேந்தன் தரைவிட்டு விண்ணோர்
அமரும் பொழுதாம் அறி.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. வெள்ளைவாரணன்,
துணைப்பேராசிரியர்
தமிழாராய்ச்சித்துறை
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்

142, கனகசபைநகர்
சிதம்பரம்.

7-10-1966.

*என்கெழுதகை நண்பர் வித்துவான் க. வேந்தனாரவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்த துயரச் செய்தி கேட்டுத் திடுக்குற்றேன். என்மனக் கருத்தினைப் பின்வரும் செய்யுளுருவில் தந்துள்ளேன்:-*

தென்னிலங்கைத் தீவகத்திற் செந்தமிழ்சேர் யாழ்ப்பாண
நன்னகரார் போற்றவர் நல்ல தமிழ்ப்புலவன்,
நாவலர்கள் பாராட்ட நாளும் தமிழ்பரப்பும்
பாவலன், சங்கப் பனுவலுடன் பன்னூல்கள்
தேர்ந்த புலமைத் திருவாளன், சான்றோர்கள்
வேந்த னெனப்பகரும் வீறுடையான் சார்ந்த
பரமேச் சுரவனூர் பண்பார்கல் லூரி
விரிவுரை யாளராய் மேவும், உரவோனும்
சைவப் புலவன், தமிழரெலாங் கொண்டாட
மெய்ம்மைத் தமிழ்ப்பா விரித்துரைப்போன், சைவர்
மதிப்புடனே போற்ற வளர்தமிழில் நல்ல
புதுநூல் புனையும் புலவன் மதிநலத்தால்
பல்லோ ருடன்பழகும் பண்பினால் நல்லோர்கள்
எல்லோரும் போற்றும் இனிமைத்திற முடையான்,
ஊக்க முடைய உரவோன், அவனையான்
சேக்கிழார் சீர்பாடும் தெய்வக் கவியரங்கிற்
கண்டு மகிழ்ந்தேன்;கருது தமிழ்ப் புலவன்
விண்படர்ந்தா னென்றசொல் வேதனையைத் தந்ததால்;
நல்லோன் பிரிவால் நலியும் உறவினர்கள்
எல்லோர்க்கு மென்றன் துயர முரைக்கின்றேன்,
சேந்தன் வளர்த்ததமிழ்ச் சீர்பரவும் எங்களன்பர்
வேந்தனூர் தில்லை விமலர் மலரடிக்கீழ்ப்
போந்துறைக இன்பம் பொலிந்து.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழை வாழ்வித்த வேந்தன்

கா. பொ. இரத்தினம் பாராளுமன்ற உறுப்பினர்

இந்த நூற்றுண்டிலேதான் தமிழ் மக்கள் தம் பழமையையும் விழுப்பத்தையும் நன்குணர்ந்தார்கள். தமிழினத்தின் பழமையையும், தமிழர் நாகரிகத்தின் சிறப்பையும், பண்பாட்டின் உயர்வையும், இலக்கியத்தின் வளத்தையும், தமிழ் மொழியின் தனித் தன்மையையும், தமிழ்க் கலைகளின் பெருமையையும் உலகம் மட்டுமன்றித் தமிழரும் இனிது உணர்ந்தது இந்நூற்றுண்டிலேயே.

இவற்றை உள்ளபடி உணர்ந்து, இவற்றுல் ஆட்கொள்ளப்பட்ட தமிழர்கள் பலராவர். இவர்களுள்ளே தமிழ் நாட்டிலும் ஈழநாட்டிலும் ஏனைய தமிழ்வழங்கும் நாடுகளிலும் சிலரே தம் வாழ்வைத் தமிழுக்குக் கொடுத்தவர். இவ்வாறு தமிழுக்கு வாழ்வளித்த ஈழத் தமிழறிஞர்களின் முன்னணியில் விளங்கியவர் வித்துவான் வேந்தனுர் அவர்கள்.

முரசு கட்டிலில் அறியாது துயின்ற மோசிகீரனுர் எனும் புலவரை வாள் கொண்டு கொல்லாது, சாமரை கொண்டு வீசிப் போற்றினுன் சேரமான் தகடுரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை எனும் மன்னன். இம் மன்னனுடைய தமிழ்ப் பற்றுக்கு "நற்றமிழ்" முழுதறிந்தமையே காரணம் என மோசிகீரனுர் பாடினுர்.

நற்றமிழ் முழுதறிந்தவர்களே தமிழுக்கு வளமூட்டி வாழ்வளிப்பார்கள். இவர்களுடைய பேச்சு மூச்செல்லாம், நனவு கனவெல்லாம் தமிழாகவே இருக்கும். நற்றமிழ் முழுதறிந்தவர் திருக்கூட்டமரபு பண்டு தொட்டுத் தொடர்ந்து வருகின்ற ஈழத்தில் இம் மரபைச் சேர்ந்தவர்களை விரல் விட்டெண்ணலாம். இத்திருக் கூட்டத்தைச் சேர்ந்தவரே வேந்தனுர் அவர்கள்.

தமிழைச் செந்தமிழாகத்—தனித் தமிழாக ஓம்புதற்கும், சைவ நெறியைத் தமிழ்நெறியாக நிலைக்கச்செய்தற்கும் அவர் அஞ்சாமலும் அசையாமலும் உழைத்தார். இக் குறிக்கோள்கள்தாம் அவரைப் பிற அறிஞர்களினின்றும் பிரித்து உயர்த்திப் புகழேணியில் ஏற்றின. இதனுலேதான் அவர்பிரிவு ஈடுசெய்ய முடியாத பிரிவாக — தமிழுலகிற்கொரு பேரிழப்பாக — நம்மை வாட்டுகிறது.

அவருடைய எழுத்தாற்றலும், சொல்வண்ணமும், பாட்டுத்திறனும் நற்றமிழ்ப் புலமையிற் கால்கொண்டமையாலேயே உறுதியும் உயர்வும், பீடும் பெருமையும் பெற்றன என்பதை இக்காலத் "தமிழ் மாணவர்" உணர்தல் வேண்டும்.

ஈழத்திரு நாட்டிலே தமிழ்மொழியை வளர்க்கும் ஆட்சிப்பொறுப்பு முழுவதுந் தமிழர்க்கு இருந்திருக்குமாஞல் வித்துவான் வேந்தனுர் போன்ற நற்றமிழ் முழுதறிந்த புலவர்களுக்குத் தம்தகுதிக்கேற்பப் பல துறையிலே தமிழ்த் தொண்டாற்றப் பெரும் வாய்ப்புக்கள் கிடைத்திருக்கும்; அரசும் பெரும் பாராட்டு நல்கியிருக்கும். வாழ்க வேந்தனுர் தமிழ்த் தொண்டுகள்! வாழ்க அவர் புகழ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஓயாத தமிழ்க்குரலும் ஓய்ந்ததோ?

வித்துவான் சி. ஆறுமுகன்
ஆசிரியர், ஸ்கந்தவரோதயக்கல்லூரி.

(1) வேலணையூர் வேந்தனார் வீறுகொண்ட
செந்தமிழன் வீழ்ந்தான் என்ற
ஓலவுரை கேட்டதுமே உள்ளமெலாம்
உருகியுடல் ஒடுங்கி நின்றேன்!
காலமெலாம் தமிழாய்ந்து கற்றோர்க்கும்
கனிந்துரைத்த கலைஞன் பட்டான்!
சாலவுமே நம்பவில்லை! தமிழ்நெஞ்சில்
வேந்தனென்றும் சாக மாட்டான்!

(2) "நீர்க்கோல வாழ்வை"னினும் 'நெடிதுநாள்'
பழகியவென் நேசன் வேந்தன்!
போர்க்கோலம் பூண்டுசொற்போர் புரிந்துமொழி
மரபதனைப் புரந்தோன் வேந்தன்!
ஆர்க்குமஞ்சா மறத்தமிழன் அறங்காத்து
எவ்வுயிர்க்கும் அன்பு காட்டிச்
சீர்க்கொருவ னாகிநின்றோன்! சிலம்புரைத்த
இளங்கோவின் சிந்தை கண்டோன்!

(3) முந்துதமிழ்ச் சங்கநூல் முழுதுணர்ந்த
மூதறிஞன் மூவாச் சாவாச்
சந்தமிகு காப்பியங்கள் தரந்தெளிந்து
நயம்பிழிந்து தந்தோன் வேந்தன்!
விந்தையுறு திருக்குறளின் மெய்ம்மைநிலை
விளங்கியெங்கும் விளக்கி வாழ்ந்து
சந்ததமும் கட்டுரைநூல் தளராது
தனித்தெழுதிக் குவித்தோன் வேந்தன்!

(4) வெள்ளியெழும் முன்னெழுந்து வேண்டுவன
நெஞ்சமிசை விரவ ஓதி
வள்ளிமண வாளனடி வணங்கியநு
பூதியமு தருந்தி வாயில்
துள்ளிவரும் புதுக்கவிதைத் தொடையெல்லாம்
அடுக்கடுக்காய்த் தொடுத்துப் பாடிக்
கொள்ளைகொளும் கவிப்பூங்கா குலவுதமிழ்த்
தாய்க்கமைத்த கோமான் வேந்தன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) சிந்தாந்த சாகரத்தில் திளைத்தாடிக்
தேவார ஆரஞ் சூடி
வித்தகனுர் வாசகப்பூந் தேன்சுவைத்துக்
கோவைவடம் மார்பில் மேவி
சித்தர்தொழுந் திருமூலர் செந்தமிழாம்
மந்திரமும் நாவிற் செப்பிப்
பத்திமிகு புராணமெனும் பசும்பாலும்
பருகிநெஞ்சிற் பதித்தோன் வேந்தன் !

(6) 'சிரித்திடுவார் சிரித்திடுக சீறிடுவார்
சீறிடுக தெய்வத் தாணை'
பொருத்தமுறத் தனித்தமிழைப் போற்றிடுவேன்
எனவாழ்ந்த புலவன் வேந்தன் !
கருத்தரங்கிற் கவியரங்கிற் கலைஞானத்
திறனெல்லாம் காட்டி வென்ற
ஒருத்தனெங்கள் வேந்தனுர் ஓயாத
தமிழ்க்குரலும் ஓய்ந்த தேயோ ?

(7) குழந்தைகளும் குமரர்களும் குதூகலிப்பக்
கவிபொழிந்த கொண்டல் என்கோ !
பழந்தமிழின் புதுமையெலாம் பழகுதமிழ்
மொழிவடித்த பண்பன் என்கோ !
எழுந்தமிழில் விண்ண திர எடுத்துமொழி
தொடுத்துரைத்த ஏந்தல் என்கோ !
தொழுந்தகைய தூயசைவத் தொன்னூல்கள்
சுவைத்துரைத்த தொண்டன் என்கோ !

(8) கலைச்சோலை தனித்ததுவே ! கண்ணுறங்கா
வேந்தனுங்கண் உறங்கி ஞனே !
மலைமலையாய் எழுதியகை விதிவலியால்
மரமாகிப் போயிற் றேதான் !
அலையலையாய்த் தமிழ்வாரி வீசிநின்ற
செவ்வாயும் அடங்கிற் றேதான் !
நிலைகுலையாய்த் தமிழ்நெஞ்சம் நீணிலத்தில்
மீண்டொருகால் நிலைகொள் ளாதோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருநல் உளன், இன்று இலன்.

பண்டிதர் வ. நடராசா,
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

இத்தொடர் எல்லோருக்கும் தெரிந்ததே. ஆயின் அதன் பொருளை உணர்தற்கான செயற்பாடு சிலபொழுதே நிகழ்கிறது. நேற்று இருந்தவர் இன்று இறப்பர் அது புதுமையன்று. நேற்று வரையும் நோய்வாய்ப்பட்டிருந்தவர் இன்று அந்நோயின் மிகுதியால் இறக்கலாம். அது புதுமையன்று. நேற்று இருந்தவர் இன்று ஏதோ ஓர் ஆபத்தில் அகப்பட்டு இறக்கலாம்; அதுவும் புதுமையன்று. ஆயின் உடல் நோய்க்குரிய அறிகுறி ஒரு சிறிதுமின்றியிருந்த வேந்தனார் உடல் நோயால் மறுகணம் இறந்தார் என்பதை எண்ணும் போதே மேலேகூறப்பட்ட தொடர் கருத்துடையதாய்த் திருவள்ளுவர் தெய்வப் புலவராகக் காட்சிதருகிறார். அதனால் மேலான மரணமடைந்த வேந்தனும் நமக்கு ஞாபகபுருடனாய் வாழ்கிறார்.

பாடப்புத்தகக் குழு உறுப்பினராக வேந்தனார் அவர்கள் என்னிடம் சில காலம் நெருங்கிப் பழகநேர்ந்தது. அவரைப் பலவருடங்கள் அறிவேனாயினும் பாடப்புத்தகக் குழுவில் அவருடன் வேலைசெய்தபோது அவரை ஓரளவு நன்கு அறியும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவரது கல்வி புதுமையானது. பழந்தமிழ் நூல்களுட்பல அவருக்கு வாய்ப்பாடம். சிறந்த உரைகளை, பரிமேலழகர் உரையை, சிவஞானமுனிவரது மாபாடிய வார்த்தைகளை, அவர் பக்கம் பக்கமாக வாய்ப்பாடமாகக் கூறுவதையும் மறைமலையடிகள் போன்றாரது நூல்களில் அவர்கள் கொண்ட கருத்துக்களையும் உரைப்பகுதிகளையும் மேற்கோளாகக் காட்டும்போதும் யாரும் திறந்தவாய் மூடாது ஆச்சரியப்படவே செய்வர்.

நூல்களை அவர் எழுத ஆரம்பித்து விட்டால் அவரது வேலைமிகுதியை நாம் நினைக்கும்போது அவர் துயில் கூடச்செய்வதில்லையோ என்று நினைக்கவே தோன்றும். வேந்தனார் பழைமையான பண்டிதர் மட்டுமன்று. இன்றைய தேவைக்கேற்ற பாடல்கள் பலவற்றை அறிஞர் போற்றும் வகையில் ஆக்கி. தாம் ஒரு கவிஞன் என்பதை நிரூபித்துள்ளார்.

வேந்தனாருக்குப் படிப்பு ஒரு விளையாட்டு. பரீட்சை மண்டபங்கள் அவருக்கு விளையாட்டு இடங்கள். அவர் நினைத்தால் சித்தியடைய முடியாத பரீட்சை எதுவுமில்லை. பண்டிதரா, வித்துவானா, புலவரா, சித்தாந்தப் பட்டங்களா, அல்லது பல்கலைக் கழகப் பட்டங்களா, எதுவும் அவரது பிரமாத முயற்சிக்கு முன்னால் ஈடு கொடுக்கமாட்டா, அவரது பாதங்களைப் பணியும்.

எங்ஙனமாயினும் என்ன? அவர் தெய்வப்புலவரது "நெருநல் உளன், இன்று இலன்" என்ற தொடரை மட்டும் வெல்ல முடியவில்லை. அவரால் மட்டுமா, எவராலும் வெல்ல முடியாத தொடர் இது. இதுவே அவரது மனைவி மக்களுக்கு நான் சொல்லக்கூடிய ஆறுதல் வார்த்தைகள்.

வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துவான், ந சுப்பையபிள்ளை அவர்களின்

# அநுதாபவுரை

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியிலுள்ள பரமேசுவரக் கல்லூரியிலே தமிழ்ப் பண்டிதராகக் கடமையாற்றி வந்த திரு. க வேந்தனர் அவாகள 18-9-66 இல் இவ்வுலக வாழ்வை நீத்து மறைந்தனர் என்ற செய்தியை அறியலுற்றதும் எம் உள்ளத்தில் ஒரு விதத் திகைப்பும அதிர்ச்சியும் உண்டாயின. காலச் சூழ்நிலைகளால தமிழ்க்கல்வி யறிவின் தரமும் சைவ சமய அறிவு வளர்ச்சியின் தரமும் பாடசாலை மாணவர்களிடையே முன்னையிலும் பார்க்கப் படிப்படியாகக் குறைந்து கொண்டுவரும இக்காலத்தில், தமிழ்க்கலை சைவசமயக்கலை யறிவுகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக, உழைத்துவந்த இவ்வறிஞரது மறைவு எம்மவர்க்கு ஒரு பெருநட்டத்துக்கும் கவலைக்கும் இடமானது எனபதே அவ்விதக் கலக்கத்துக்குரிய காரணம்.

சிலகாலத்துக்கு முனபெல்லாம் ஆங்கிலப் பாடசாலைகளில் தமிழ்க்கலை பயிற்றுங் கடமை பூண்டவரை யெல்லாம தமிழ்ப் பண்டிதர் என்று உலகம் வழங்கி வந்தது. இவரோ அத்தகைய சாதாரணமான பண்டிதரல்லா: ஒன்றிரண்டல்ல, மூவகையான கலைக் கழகங்களில் அரங்கேற்றப்பெற்ற தமது கலையறிவு காரணமாக அக்கழகத்தினரால் **தமிழ்ப் பண்டிதர், வித்துவான், சைவப் புலவர்** என்ற பட்டங்களாகிய விசேடத் தகைமையினை யுடைய பண்டிதராவர்.

அது ட்டுமா? "எத்துணையவாயினுங் கல்வி யிடமறிந், துய்த்துணர் வின்றெனினின்றுரும்- உய்த்துணர்ந்தும். சொல்வன்மை யின்றெனினென்னு ம∴துண்டேற், பொன்மலர் நாற்ற முடைத்து" என்றபடி தாமபெற்ற கலையறிவுச் செல்வத்தை தமக்குமட்டுமன்றிப் பிறர்க்கும் பயன்படுமாறு தமது சொல்வன்மையினுல் வாரி வழங்கி வந்த வள்ளலுமாய் வாழ்ந்தவர்.

மேலும், பெருமபாலார்க்குக் கிட்டாத ஒரு விநோதச் சீரியகுடும்பச் செல்வவாழ்க்கையில் வாழ்ந்த புலவருமாவர் இவர்; "கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச், செல்வப் புதல்வனே ஈர்ங்கவியாச் — சொல்வளம், மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ், செல்வமு முண்டு சிலர்க்கு" என்ற விதமாக, அக்குடும்ப வாழ்க்கையில், இவருக்கு 'மனைவி' கலவி; புதல்வர்: இவர் புனைந்தியற்றிய பாடல்கள; செல்வம்: சொல் வளம்' என்றிங்ஙனம அமைய, தமிழ்க் கலையார்வ விருந்தினர்க்குப் புதியகவிச் சுவையமுதும் விரிவுரைச் செவியமுதும் ஊட்டி இல்லறம் நடாத்தி இன்புற்று வாழ்ந்தனர்,

இவர் இயற்றி வெளியிட்ட கவிதைப்பூம் பொழிலும நல்லூர்த் திருப்பள்ளியெழுச்சியும் குயிற்பத்தும போன்ற நூல்களின் பாடல்கள் இவருக்குப் பிற்காலத்திலும் நின்று நிலவி இவரதுபேரைப் பரப்பும் பெருஞ் சந்ததிகளாக உள்ளன. க பொ. த. பரீட்சைக்குரியவாகிய தமிழிலக்கிய பாட உரை நூல்களையும், சைவசமய (இந்துசமய) பாட நூலையும் மாணவர்க்கும் பிறர்க்கும் பயன்பட இவர் இயற்றியுதவியமை தமிழ்க்கலை சைவ சமயக் கலையறிவுகளின அபிவிருத்தியின் பொருட்டு உழைக்கும் ஆர்வத்தைப் புலப் படுத்தும்,

இங்ஙனம் பலவாறுகத் தமிழ்க்கலை சைவ சமயக் கலையறிவுகளை அபிவிருத்திசெய்து நம்மிடையே வாழ்ந்துவந்த இவ்வித்துவப் பெரியார். மின்னுமல் முழங்காமல் வானம் மழை பொழிந்தா லொப்ப எவரும் எதிர் பாராத வகையில் திடீரென ஏற்பட்ட.........பிணியே வியாஜமாகக்கொண்டு இவ்வுலக வாழ்வை நீத்து மறைந்தாரென்ருல், அது நம்நாட்டவர் எல்லார்க்குமே ஒரு பெருங் கவலைக்கிடமான செய்தியல்லவா! அன்னரது பிரிவால் பெருந்துயருறும் மனைவி மக்கள் சுற்ற மித்திரர்களுக்கு எங்கள் அநுதாபத்தை அறிவித்துக கொள்ளுகிருேம. அவர்களுக்கு மனச்சாந்தியை அருளும்படி எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி யேத்துகின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவருலகஞ் சென்ருன் வாழி·

(வித்தியாரத்தினம் நவாலியூர் சோ. நடராசன்)

என்னில் இளையவன் மன்னே
என்னிற் பெரிதும் இனியவன் மன்னே
என்னிற் சாலவும் நல்லவன் மன்னே
என்னிலும் பெரிய கவித்திற முடையான்
தண்ணூர் தமிழின் கற்பகச் சோலையிற்
பண்ணூர் இன்கவி மிழற்றிய சாதகம்
மண்ணீர் உண்ணு மறுவில் சிந்தையில்
விண்ணீர் பருகும் வெற்றி வேந்தனைப்
பாமழை பொழியும் பாவலர் விருந்தை
நாமழை சொரியும் ஞானபண் டிதனை
சோம சுந்தரக் கவிக்குலந் தழைக்க
ஏமமா யிந்நிலத் தெழுந்தபொற் கொடியைச்
சைவசித் தாந்தச் சண்டமா ருதத்தைச்
செய்வது சிறிதுஞ் சிந்தியா தையோ
நன்றிகொல் கூற்றே: நடுவிற் சிதைத்தாய்
மறப்பதற் கரிதே வறுமையுற் ருேமால்
பெறற்கரி தாகிய பெருநிதி யிழந்தே
தாகமுற் ருேர்க்குத் தண்ணரு விப்புனல்
போகமு யோகமும் புனிதமாய்க் கனிய
அழகுத் தெய்வ மருளிய நன்மரம்
பழகப் பெரிது மினியவன் பட்டான்
பாவலர் கண்ணீர் பொழியத்
தேவ ருலகஞ் சென்ருன் வாழியே.

4-10-66

---

1. தற்பாடியதனி யுணவிற்
புள் - சாதகப்பறவை; வானத்தில் ஊறியதுளியையே
உண்ணும்; இல்லையேல் உயிர் நீத்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலேக்காய்ச்சிச் சீனிபோட்ட பாவலன்

*இரசிகமணி. கனக. செந்திநாதன்*

ஒரு புலவரோ எழுத்தாளரோ பொதுநலத் தொண்டரோ இருக்கும் போது புகழாமல் இறந்தபின் 'ஆகா ஊகூஉ' என்று புகழ்வதும், எழுது வதும் தமிழரின் இரத்தத்தில் ஊறிய பழக்கமாகிவிட்டது. தமிழ்நாட்டில் இந்நிலே சிலகாலமாகச் சிறிது மாறி அபரிமிதமாகப் புகழ்மாலே சூட்டும் வழக்கமாக மாறிவிட்டது. 'ஈழத்தி லும் தரமான எழுத்தாளர்கள் கவி ஞர்கள் இருக்கிருர்கள்' என்று நம்மவ ருக்கும் பிறர்க்கும் காட்டவேண்டும். என்னும் நோக்கத்தோடு பத்துவரு டங்களுக்கு முன்னே ஈழகேசரிப் பத்திரிகையில் ஈழத்துப் பேனுமன்னர் கள் என்ற அறிமுகத்தை நான் எழு தினேன். வித்துவான் வேந்தனர் அவர்களைப்பற்றி 13-11-56இல் எழு தியபோது அவரை ஒரு நல்ல கவி ஞர் என்பதைத் தொட்டுக் காட்டி னேன். 'காலேத் தூக்கிக் கண்ணில் ஒற்றி' என்ற குழந்தைப் பாடலே அவரது மிகச் சிறந்த பாடலெனு இரசிகர் முன்வைத்தேன். அந்த அறி முகத்தில், "குழந்தைகளின் காதுகளே இரும்புக் காதாக்காமல், தாய் தந்தை யர்மேல் அன்பினை இளம்பருவத்திலே ஊட்டி வளர்க்கும் கருப்பொருளேத் தாங்கிய அருமையான பாடல் இது" என்று எழுதிவிட்டு, மேடைதோறும் முழக்கமிட்டு வாலிப உள்ளங்களின் மனப்போக்கையறிந்து, வாழ்ந்து உயர்ந்த அக்காலத் தமிழரின் நாகரீ கத்தின் சிறப்பினையும், இக்காலத் தமிழரின் தாழ்வு நிலேயையும் 'அக்கு வேறு ஆணிவேருக'ப் படம்பிடித்துக் காட்டும் வேந்தனரை ஒரு நல்ல கவி ஞராகவே நான் மதிக்கிறேன்" என் றும் சொல்லி வைத்தேன்.

'கரவைக்கவி கந்தப்பனர்' என்ற புனைபெயரில் நான் எழுதியமையா லும், அவரோடு எனக்கு எந்தவித மான அறிமுகமும் இல்லாமையாலும் என் எழுத்து எழுத்தாகவே கிடந் தது. பின்பு, பல கல்லூரிகளிலும் பொது மேடைகளிலும் இலக்கிய மன்றங்களிலும் ஈழத்துக் கவிதை வளர்ச்சிபற்றி நான் பேசும் பொழு தெல்லாம் 'காலேத் தூக்கி' என்ற பாடலேயும், 'கோவிலுக்குப் போகும் போது கூட்டிப்போகும் பாட்டி, கும் பிடு நீ தம்பியென்று குனிந்து சொல் லும் பாட்டியையும்' விமர்சித்து வேந் தனரை இரசிகர் உள்ளங்களில் பதிய வைத்தேன். பாதிவழி என்ற தலேப்பில் 'ஈழநாடு' பத்திரிகையில் மேற்படி பாடலுக்கு விமர்சனமும் எழுதினேன். அப்போதுதான் வேந்தனர் அவர்கள் என்னைப்பற்றி அறிந்தார். அவர் ஒரு முறை என்னைச் சந்தித்தபோது, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளே அவர்களின் 'சமணபுத்தகாவியங்கள் பொருள் பிறழ்வுடையவை' என்ற குறிப்பை மறுத்து, 'சிலப்பதிகாரப் போர்' ஒன்றைத் தாம் நடாத்தியதை ஞாபகஞ் செய்து அதன் பிறகு பண் டிதமணியின் மாணவர்கள் தம்மை மதிக்கமாட்டார்கள் என்றதன் தப் பபிப்பிராயத்தை என் அறிமுகமும் பல பேச்சுக்களும் போக்கிவிட்டன என்றும், இந்துமகளிர் கல்லூரியில் உங்கள் பேச்சைக் கேட்ட என் மகள், என் பாடலேக் கூறி நீங்கள் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமரிசனத்தை நன்கு இரசித்தாள் என்றும் கூறினர்.'' எழுத்தாளனின் கொள்கை. கட்சி இவற்றை எண்ணு மல் அவன் எழுத்தை மதிக்கும் குணத்தை மெச்சி அவர் கூறியபோது வேந்தனரின் உள்ளத்தை என்னல் நன்கு புரிந்துகொள்ள முடிந்தது. அதன் பிறகும் அவரை 'வழியிலும் தெருவிலும் சந்தித்திருக்கிறேன். 1964ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ''நீங்கள் எழுதியுள்ளது போல விரை வில்தான் ஒரு கவிதைத் தொகுதி'' வெளியிடப் போகும் ஆவலைத் தெரி வித்தார்.

திடீரென்று ஒருநாள் அவரிட மிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அது ஒரு கவிதைக் கடிதம். தம் முடைய பாடல்கள் சிலவற்றைத் தேடி எடுத்து உதவுமாறு கேட்டிருந் தார். ஏறுவதற்கு ஏணியாக விமர் சகர்களை உபயோகித்துவிட்டு ஏணி யைத் தட்டிவிட்ட எழுத்தாளர்களைக் கண்டவன் நான். முகத்தின்முன் இனிப்பாக மொழிந்து பின்னல் ''முட் டாள்தான் கெட்டான்'' என்று இகழ்ந்து கூறும் இலக்கிய உலகத் தைப் பச்சைப்படியாகத் தரிசித்தவன் நான். அப்படித் தரிசித்த எனக்கு பண்டிதமணியோடும் கணேசையா வோடும் கண்டனப்போர் செய்த வித்துவான் வேந்தனர் புகழ்மாலை சூட்டுவதென்றல் ... என் உள்ளமே மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தது. அவர் பாடல்கள் அமிர்ததாரைபோல் இனித்தது. 5-10-64இல் அவர் இப் படி எழுதினர்:-

இனிய தமிழ் இலக்கியங்கள்
என்றும் நுகரும் இரசிகமணி
கனக செந்தி நாதனென்றே
கற்றேர் புகழும் 'கலைச்செல்வ'
கனியும் அன்பால் எனைப்போற்றிக்
கவிஞன் என்றே பாராட்டும்
புனித உளத்தாய், நின்புலமை
பொலிக, பொலிக, பல்லாண்டு.

'காலைத் தூக்கிக் கண்ணி லொற்றி'
என்று தொடங்கும் என் கவிதை
சாலச் சிறந்த தென்றெங்கும்
சாற்றி உள்ளந் தழைத்திடுவோய்
காலங் கடந்து வாழ்கவிஞன்
கருத்தைக் காணும் திறனய்வுக்
கோலின் செம்மை கோடாநின்
குடைக்கீழ்க் கவிஞர் குலம் வாழ்க.'

'நின் திறனய்வுக் குடைக்கீழ்க் கவி ஞர் குலம் வாழ்க' என வாய் குளிர, மனம் குளிர வேந்தனர் வாழ்த்திய வாழ்த்து 'பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப் பருகத்தந்தது' போல் இனிக்காமல் வேறென்ன செய்ய முடி யும்? எனது இலக்கிய முயற்சி - திற னய்வு முயற்சி - அவரது நற்சாட்சி பெற்றமையைக் கண்டு மனம் பூரித் தேன் சில 'ராஜாக்களும், சில 'சிங் கங்க'ளும் செய்த 'வடு' அவரது அமிர்ததாரையால் மறைந்தே போ யின. ஆனல், என் உள்ளம் எப் படி மனம் மகிழ்ந்ததோ அவரது மறைவைக் கேட்டு மகா துக்கத்தில் ஆழ்ந்தது. அவர் மறைந்த தினத் துக்கு முதல்நாள் தனது 'பாலைக் காய்ச்சிச் சீனி போட்ட' கவிதைத் தொகுதியாகிய கவிதைப் பூம் பொழிலை இம் முறையாவது சாகித்ய மண்டலத்தில் பதிந்து தரும்படி கேட்டார். ஆம் என்றேன். நான் கொடுத்த வாக்கை இனி நிறைவேற்றி என்ன பயன்?



257966
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய தமிழ் நண்பன்

வி. சீ. கந்தையா, மட்டக்களப்பு
அதிபர், இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை

நண்பன் வித்துவான் வேந்தன். அவன் தமிழுக்கு இனியதொரு நண்பன். தமிழ் கற்றாருக்கு அதனிலும் இனிய நண்பன். அவனோடு கலந்து குழைந்து வெளிவரும் தமிழும் மிக இனிமை பயந்து நிற்கும். அது உரை நடையாகவோ அல்லது கவிதையாகவோ அல்லது கட்டுரையாகவோ இருக்கலாம். எதுவாயினும் இனிமை இனிமைதான். பயனும் அதற்கேற்ற உயர்வு.

அவன் மண்ணுலகினை மறந்தான்; விண்புகுந்தான் என்று செய்தி கேட்டோம். அதிர்ச்சி, அதிர்ச்சி, ஈழநாட்டின் தமிழ்ச் சிறப்பினை வளர்ப்பார், போற்றுவார் எல்லார்க்கும் இதுதான் அவ்வேளை ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன்.

நமது பண்டிதமணியார் கணபதிப் பிள்ளை அவர்கள் ஓரிடத்தில் கூறியதுபோன்று 'ஈழத்தின் கவிதைப் பரம்பரையைக் கட்டிக்காத்த' வேந்தன் தமிழ்த் தொண்டர்களுக்கெல்லாம் தலையிடிக்கச் செய்து சென்று விட்டான்!

ஈழநாட்டுக் கவிதைப் பரம்பரையானது வடக்கே சோமசுந்தரப் புலவர்பெருமானால் அண்மையில் உயர்வுற்று நிற்கக் கண்டோம். 'அவர் மறைந்து போனார். இனியாவர் அக்குறையை நிரப்ப வல்லார்? இது நமது நாட்டுத் தமிழறிஞர்கள், அபிமானிகட்கெல்லாம் எழுந்ததோர் பெருங்கவலை. தங்கத் தாத்தா மறைந்தபோது, வேந்தன் முன் வந்தான்; கவிதைப் பொழிலோடு வெளிவந்தான். பண்டிதமணி போன்ற பெரும் பெரும் அறிஞர்களெல்லாம் 'அப்பாடா, கவலை தீர்ந்தது' என்று "சும்மா" இருந்தனர். அவர்களுக்கெல்லாம் அந்த ஆறுதலை நீளமாகக் கொடுத்து வைக்கக் காலன் விரும்பவில்லைப்போலும். நோய் நொடிகளாகிய முன்னேற்பாடுகளைக் கொடுத்தால், எங்கே இவர்கள் எனக்குக் குறுக்கே வந்து குழப்பிவிடுவார்களோ என்று அவன் பயந்திருப்பான். பேச்சுப் பறைச்சலில்லாமல் வேந்தனைக் கொண்டு போய்விட்டான்! அந்தக் காலன்தான் ஏதும் ஆசை காட்டிக் கூப்பிட்டிருந்தாலும் நம்மையெல்லாம் ஏமாற்றிவிட்டுப்போக இந்த வேந்தனுக்கு எப்படித்தான் துணிவு ஏற்பட்டதோ! மனம் வந்ததோ!

சென்ற ஆண்டிலே சிறிதுகாலம் எமது அன்புக்கும், நண்புக்கும் உரியரான வேந்தனுருடன் தொடர்ந்து கூடியிருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். அவருடைய 'கவிதைப் பூம்பொழில்' வெளிவந்து சிலநாட்களாயிருக்கலாம். ஒரு நாள் 'கலைச் சோலைப் பக்கம் சென்றேன். வேந்தனுருடைய அகமலர்ந்த இனிய வரவேற்பு; மனைவி மக்களுக்கு என்னைப் பற்றிய அன்புகுழைந்த அறிமுகம் "இவர்தான் அந்த.........வீ. சீ. க." எதிர்பாராது அங்கு அன்று விருந்துண்டேன். ஒருபாடல் எப்படியோ என்னிடம் பிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிழ்தனைந்த விருந்தளித்தான்,
அன்பளித்தான், இன்முகமும்
எழில் நகையும் இலங்கும் செல்வக்
குழந்தையரும் கோமகளும்
குழைந்துறவு கொண்டாடும்
குண நலத்தால் எமைப்பிணித்துக்
கொண்டானுங்கு
இமிழ் கடல் சூழ் புவிக்கீடாய்
இவை தந்து மகிழ் கொண்டு
தன்னன்பால் எனை நிறைத்துக்
கொண்டதோடு
தமிழ் குழைந்த கவிதைப் பூம்
பொழில் தந்தான் வேந்தனெனும்
தமிழ் வாணன் புகழ்சிறந்து வாழ்க
மாதே!",

உடனே எழுதித் கொடுத்துச் சென்றேன்.

மறு நாட்காலை என்மீதும் வேந்தனார் கவிதை சில எழுதிக் கொணர்ந்து தந்தார். என்னை வெகுவாகப் பாராட்டியிருந்த கவிதைகள் அவையாதலால், அவைகளை இங்கு யான் காட்ட விரும்பவில்லை. செந்தமிழ் குழைந்தவையும், அக்காலத்தே என்னுள்ளத்தில் ஊர்ந்திருந்த கவலைகளைத் துடைத்து அமைதி ஊட்டியவையுமான கவிதைகள்.

வேந்தனார் செய்ந்நன்றி மறவாத சிரிய பண்பாளர். இதற்குச் சான்றுகள் பல உளவாதலை அவரை நன்கு அறிந்தார் அறிவர். தமது சிறந்த கருத்துக்களெல்லாம் பொதிந்த வைப்பாக அவ்வப்போது வெளிவந்த அவரது பாடல்களின் தொகுதியான கவிதைப் பூம்பொழிலின் உரிமை உரை அவற்றுள் மிக மிகச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாக அமையலாம்.

"அன்புடன் என்னைக் கூவி
அருகினில் இருத்தி நீங்கள்
இன்தமிழ் இலக்கியநூல்
சமயநூல் எழுதித் தந்தால்
பொன் தருகின்றேன் என்று
புகன்றெனைப் புரந்த வள்ளல்
தன்திரு அனைத்தும் ஈசன்
தாள் நிழல் தந்ததென் போன்";
"என்றுமென் உள்ளந் தன்னில்
இருந்திடும் இனியோன் தில்லை
மன்றில் நின்றுடும் ஈசன்
மலரடி மறவாத் தூயோன்
பொன்றிகழ் தேய்வேந்திரனுர்க்கிக்
கவிதைப் பூம்பொழிலை
நன்றியின் காணிக்கையாய்
நயநது நான் நல்குகின்றேன்."

அற்புதமான நன்றிக்கடன்! மற்றையோர் எவரும் இப்படியான சிறந்ததொரு நன்றிக் கடனைச் செலுத்தியிருக்க முடியாதல்லவா!

தமிழ் மொழி இனிமையும் குழைவுமானதுதான்! ஆயினும் அம் மொழியிலே வீரமானதொரு கம்பீரத்தன்மையும் மறைவாக இருக்கின்றது. அந்தக் கம்பீரத் தன்மையையே அதியமானிடம் பரிசில் பெற மறுத்த பெருஞ்சித்திரனாரிடம் நாம் காணுகின்றோம். வித்துவான் வேந்தனார் இத்தகையதொரு தமிழ் மொழிப்பற்றுல், தமிழ்மொழி அபிமானத்தால் பிறந்த தன்மானம் மிக்குடையவர். ஒரு சந்தர்ப்பம் கூறலாம்: ஒருநாள் யாழ்ப்பாணக் கடைவீதியில் நான் நின்றிருந்தேன்; பெரிய உத்தியோகத்தர் போலக் காணப்பட்ட இருவர் தம் காரை விட்டிறங்கி என்னிடம் வந்தனர். அவர்கள் ஒழுங்கு செய்த விழா ஒன்றில் நான் பேச்சாளனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேண்டும் என்பது அவர் விருப்பம் என்றனர்.

இதனை எப்படியோ வேந்தனுர் அறிந்தார். ''இப்படிப்பட்ட பேர்வழி களுக்கெல்லாம் நான் இடம் கொடுப்ப தில்லை தமிழுக்கும்சரி, தமிழ் கற்ற வனுக்குஞ்சரி, உரிய தரம் ஒன்று உண்டு. அதை மதிக்காது தெருவி லும், வழியிலும் பல்லிளிக்கும் பெயர் வழிகளுக்கு எல்லாம் நாம் மதிப்புக் கொடுக்கக் கூடாது'' என்று உணர்ச் சியோடு என்னிடம் கூறினுர். உண் மையான கூற்றுத்தான். தமிழ் மொழிக்கும், தமிழ் கற்ருேருக்கும் மதிப்புக் கொடுக்காதோரை நாம் மதிக்க வேண்டியதில்லை என்பதுதான் அவர் கொள்கை. தமிழ் மானம் போற்றவேண்டிய, காக்கவேண்டிய ஒன்றல்லவா!

தமிழறிஞரிடம் பெருமதிப்புக் கொண்டு அவர்தம் சிறப்புக்களை மன மார வாயாரப் புகழ்பவர் வேந்தனுர். நாவலர் பெருமானும், தங்கத் தாத் தாவும் அவரது தூய சிந்தனையிற் துலங்கும் சோதிகள். தமது கவிதைப் பூம்பொழிலில் அப்பெருந்தகையினர் மீது வேந்தனுர் செய்திருக்கும் கவி தைகள் மிக்க சிறப்பு வாய்ந்தவை. அப்பெருமக்கள் மீது கொண்டிருந்த மதிப்பையும் அன்பையும் போலவே, விபுலானந்த அடிகளார் மீதும் பெரி தும் ஈடுபாடு கொண்டிருந்தவர் வேந்தனுர். ஈழத்திருமணி நாட்டின் இளவளஞாயிறுபோல் இலங்கிச் செந் தமிழ்ச் சிவஒளி பரப்பியவர் அருட் டிரு விபுலாநந்த அடிகளார்'' என்று ஆராமையோடு ஓரிடத்திலே அடிகளா ரைப்பற்றி அவர் குறிப்பிட்டிருப்பதை நாம் காணலாம்.

அனைவர்க்கும் இனிய நண்பர் வேந்தனுர். அவரது மனித உடல் மறைந்து விட்டது. விண்புகுந்த அத் தமிழ்ப் பெருமகனுருடைய புகழுடல் தமிழ் உள்ளளவும் நிலைத்து நிற்கும்.

அவரது பிரிவாற் கலங்கியிருக்கும் அன்னுரது மனைவிமக்களுக்கும் அவ ரது நண்பர், உறவினர் யாவர்க்கும் எல்லாம் வல்ல திருவருள் நல்ல மன அமைதியை நல்குமாக. வாழ்க இனிய தமிழ் நண்பன் வேந்தன் புகழ்!

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிக் கடன்

செல்வி புஷ்பா செல்வநாயகம்
ஆசிரியை இந்துமகளிர்கல்லூரி

சில ஆண்டுகளுக்குமுன் நான ஒரு விழா வில வித்துவான் வேந்தனரைக்கண்டு, பேச் சாற்றல் மிக்க அவரோடு அதே மேடையில் பேசும்பேறு பெற்றேன். எனது சகோதரர் களுக்குத் தாம் அவர்களது பள்ளிப் பருவத் தில் தமிழாசிரியராகக் கல்லூரியில் இருந்த தாகத் தம்மை அறிமுகமசெய்துகொண்ட அப்பெரியார் எனது பேச்சு முடிந்ததும் சில அறிவுரைகளைக் கூறினர். "கற்பனை எழில்வீசும் கம்பனின்கவிதை, அற்புத வள் ளுவன் ஆக்கிய திருக்குறள், தெய்வக் கற் பினர் போற்றும் இளங்கோவின் சிலம்பு முதலிய இலக்கிய நூல்களையெல்லாம் நன்கு கற்று, ஆராய்ந்து, அவற்றில் திளைத்து அவ் வரும் பொக்கிஷங்களிலுள்ள கருத்துக்கள செறியத் தங்கள் பேச்சுக்கள் அமைய வேண்டும்", என்று யோசனைகூறிய இப் பேராசான் மறுநாளே தாம் பெருமதிப்போடு போற்றிக் காத்துவந்த நூலான சிலம்பை நான் படிக்கவென அனுப்பிவைத்தார். அது மட்டுமல்ல, நான் பங்குபற்றிப் பேசிய சில விழாக்களுக்குத் தமது மனைவியையும் மகளை யும் அழைத்துவந்து அவர்களை அறிமுகம செய்து எனது பேச்சைக் கேட்பதற்காக அவர்களை அழைத்து வந்ததாகக் கூறினர். பேச்சாளர் வரிசையில் என்னை இடம்பெறச் செய்ய இவ்வாறுகப் பலவழிகளில் ஆக்கமும் ஊககமும் தந்துதவிய இவ்வள்ளலது பண்பு என்னை வியப்புக்கடலில் ஆழ்த்தியது. ஒரே துறையில் ஈடுபடும் இருவர் ஒருவர்மேல் மற் றவர் அழுக்காறுகொண்டு குறைகூறுவதும், மட்டம்தட்டுவதும் சர்வசகஜமாயிருக்க இவ் வபூர்வ மனிதரோ சற்றும் வெறுப்போ அசூ யையோ இன்றித் தாம் சலியாது ஈடுபட்டுத் தொண்டாற்றும் பேச்சுத்துறையில் மேன் மேலும் ஈடுபட்டு முன்னேறுவதற்கு வேருெரு வருக்குத் தாமாகவே மனமுவந்து வழிகாட்ட முன்வந்த இவ்வரிய செயல் இவரது தூய உள்ளத்துக்கும், உதாரகுணத்துக்கும் பண் பிலக்கணமாக அமைகிறது.

சைவனுகப் பிறந்த ஒவ்வொருவரும் சீரிய மொழியாம் நந்தமிழையும், நன்னெறியாம் சைவத்தையும் தமது இருவிழிகளாய்ப் போற் றிக்காக்க வேண்டுமென்ற இலக்கணத்துக் கமைய வாழ்ந்து காட்டிய இப்பெருந்தகை எந்நேரமும் தூயவெண்ணீறும் அதன் மத்தி யில் இலங்கிய சந்தனப்பொட்டும் துதைந்த நுதலோடு சைவத்தின் சின்னமாகக் காட்சி வழங்கியதைக் கண்டுகளிதத நாம் அவர் தமிழுக்கும் சைவததுக்கும் ஆற்றிய பெரும் பணியை மறக்கவோ மறுக்கவோ முடியாது. நம்நாட்டுக் கல்விப் பொதுத்தராதர 'சாதா ரண) பரீட்சை முதலிய தேர்வுகளுக்குத் தோற்றம் கொடுககும் மாணவ மாணவியர் கைகளில் இவரது தமிழ்க் கருத்துரை நூல் களும், சைவ பாடத் திட்டங்களுக்குரிய உரைக்கோவை நூல்களும் அழகும். கம்பீர மும்பெற வீற்றிருக்கும். கம்பனது கவி வளத்தின் செறிவை நன்கு ஆராய்ந்து, அதன் தேக்கத்தில் ஊறித்தெளிந்த இவர் தமது மனதில்எழும் உன்னத கருத்துக்களை யெல்லாம் வடித்து ஆக்கித்தந்த எத்தனை யோ பயன்தரும் நூல்களை நம்பியிருந்த மாணவ மாணவிகளும், ஆசிரிய ஆசிரியை களும கணக்கில்லாதவர். சாதாரணமாக எவரையும் மயங்கவும் தியங்கவும் செய்ய வல்ல நமது நுண்செறிவு வாய்ந்த சைவ சமய பாடத்திட்டங்கள் அடங்கிய தொகுதி களைத் தாம் நன்குணர்ந்து அதனை மற்ற வரும புரிந்துகொள்ளத்தக்க எளியமுறையில் உரை நூல்களாக அமைத்து வழங்கிய இச் சைவத்தொண்டரை நம் ஆசிரிய உல கமும், மாணவ உலகமும் என்றும் மறக்க முடியாது. அருமையான கற்பனை ஊற்றுச் சுரக்கும், சொல்நயம் ததும்பும், எளிமையும் செழுமையும் தவழும் இவரது நூல்களை ஒரு முறை படித்தவர் அவற்றை உயிருள்ள ளவும் மறவாரென்பது திண்ணம். பழம் பெரும் நல்லூராம் புனிதமானபதியில் எழுந் தருளிய கந்தப்பெருமான் பேரில் இம்முருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர் பாடிய திருப்பள்ளிஎழுச்சிப் பாடல்கள் அடங்கிய சிறுநூலை அச்சேற்றியபோது அதில் ஒரு பிரதி எனக்கும் கிடைத்தது. அளவிற் சிறியது; ஆனுல் கருத்தில், பெருமையில், தகைமையில், புலமையில், இனிமையில் பெரிய அந்நூலை யாவரும் படித்தின்புறவேண்டும், பயனடைய வேண்டும் என்றேங்கிய ஆசிரியர் பிரதிகளைப் பலருக்கும் கொடுத்து மகிழ்ந்தார். நாவன்மையும் பாவன்மையும் மிகுந்த இப்பெருமகன் வட மொழி கலவாச் சீரிய, தூய தமிழ் மொழியில் எழுதிய அரும்பெறல் நூல்களை யாவருங் கற்று மகிழவேண்டும்.

படாடோபம், அச்சம், தயக்கம், சோர்வு, கோழைத்தன்மை முதலிய பதங்களுக்கு இத்தமிழ்த் தொண்டரின அகராதியில் இடமிலலை. எளிமையும், தூய்மையும், தமிழ் மணமும் பொலியும் வெள்ளிய ஆடைகளை அணிந்து மேடையில் முழக்கம்செய்யும் இத்தமிழ் மகனின், தமிழ்வேந்தனின் வீரகர்ச்சனையைக் கேட்டோர் அயர்ந்துவிடுவர். மனதில் எழுந்த எண்ணக்குவியல்களை, ஆழ்ந்த கருத்துக்களை, உணர்ச்சிக் குமுறலகளை மறைக்காமல், மழுக்காமல், துவைக்காமல் அப்படியே பட்டவர்த்தனமாக, ஆணித்தரமாக அறையும் இவரது அஞ்சா ஆற்றல்கண்டு மலைத்தவர் பலர். அஞ்சாமை, துணிவுடைமை முதலிய அணிகலன்களைப் பூண்டொழுகிய இவரது சிம்மக்குரல் எதிரொலித்த அவைகளும், மேடைகளும் இவரது திண்மையான, வலிமையான, வீராவேசமான, உணர்ச்சிபூர்வமான, சாராம்சம் பொருந்திய சொற்பிரவாகத்துக்குச் சான்று பகரும். தமக்கு மிகவும் பிடித்தமான சிலப்பதிகாரமெனும் காப்பியத்தைப்பற்றித் தம்மை மறந்தநிலையில் நேரத்தையும், அடுத்தவரையும், அவையையும் மறந்து தமக்கே உரித்தான கம்பீரமும் வீரமும் செறிந்தநடையில் இச்சிலம்புப் பிரியர் சொல்மாரி பொழிய ஆரம்பித்துவிட்டால் யாவரும் செயல்மறந்து ஸ்தம்பிதம் அடைந்துவிடுவர். தமது காதல்மிகு அலர்மணியெனும் மணிமொழியாம் திருவாசகம் பற்றிப் பேசப் புகுந்தாலோ உலகையே மறந்து அப்பெருநூலின் மகோன்னத, செழுமையான கருத்துக்களையும் பெருமைகளையும் வாரி வாரி வழங்கும் ஒரு கொடையாளியாக இப்பேராசிரியர் மாறிவிடுவார். ஒரு கணப்பொழுதேனும் வீணே விரயமாக்க விரும்பாத இவர் உழைப்பின் உறைவிடமாக, செயலின் களஞ்சியமாக, வினையின் பிரதிநிதியாகத் தாம்மட்டும் விளங்குவது போதாதென்று தம்மைச் சார்ந்தோர், சாராதவர் முதலிய அனைவரும் அயராது, சோராது, கர்மம்புரியும் கர்மவீரராகத் திகழ வேண்டுமென்று ஆவனசெய்து மற்றவர்களை நல்நிலைக் குயர்த்தித் தாமும் உயர்ந்தவரானுர். "அறிவைப்போல் உள்ளுதோறுள்ளம் ஈர்க்கும் உறுபொருள் உலகில் வேறுண்டோ", எனறு அடிக்கடிசெப்பும் வழக்கமுள்ள இவர் பல அறிஞரது அறிவுரைகளைக் கேட்டும், சான்றோரது நூல்களைப் படித்தும், ஆராய்ந்தும், தெளிந்தும் பயன்பெற்று - ஆற்றல் மிக்க பேரறிஞுக மாறவேண்டுமென்று வாழ்ந்து அறிவைச் சேர்க்கும், அதனைப் பரப்பும் அறிவின் பெட்டகமாகத் திகழ்ந்தார்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

என்ற வள்ளுவன் கூற்றினுக்கமைய நிலைபேறில்லாத இவ்வுலக வாழ்விலிருந்து நீங்கி எனறென்றும் நிலைபெறும் அப்பெருமானது திருமலரடிகளில் அடைக்கலம் புகுந்த இச்சீரிய பண்பாளர், நம்மிடையே தூயஅறிவின் விளக்கமாக, செறிந்த செல்வத்தின் பிரதிநிதியாக, பைந்தமிழின் காவலனுக, இன்தமிழின் பாவலனுக சொற்சுவை பொருட்சுவை நனிசொட்டும் பேச்சாளனுக, தெள்ளிய கவின் சொட்டும் சொற்சித்திரங்கள் தீட்டும் எழுத்தாளனுக, என்போன்ற அறிவிற் சிறியோரின் வழிகாட்டியாக என்றென்றும் இலங்குவாரென்பதில் ஐயமில்லை.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிதே"

என்ற பொய்யாமொழிக்கேற்ப இப்பெரியார் பேச்சுத்துறையில் எனக் கார்வமூட்டி ஆற்றிய உதவிக்குப் பிரதிபலனுக எனது நன்றிக் கடனைத் தீர்க்குமுகமாக இக்கட்டுரையினை இவரது நினைவுவிழா மலரில் ஓர் இதழாக அமைய வேண்டுமென்ற விருப்போடு சமர்ப்பிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வமே காத்தான்

— குறமகள் —

I

வண்மைசேர் சொல்லின் செல்வம்,
வாழ்தின கரனில் கண்டும்;
திண்மைசேர் பேச்சின் வன்மை,
திகழ்தமிழ் விழாவில் கேட்டும்;
உண்மைசேர் உயர்ந்த ஞானம்,
உவ்விடம் வந்தே யுண்டுன்;
தண்மைசேர் தமிழின் சுவையைத்
தருக்குடன் உணர்ந்தேன் அன்று.

II

பண்டித வகுப்பி லுன்முன்
பாடங்கேட் டுணர்ந்த காலம்
தென்றிசைக் குற்ற வேந்தே
திரும்பவும் வந்தி டாதோ!
அன்றிருந் தென்றன் உள்ளத்
தரும்பெருங் குருவே யாகி
மண்டியே வாழு கின்றீர்
மறக்கவும் போமோ வாழ்நாள்.

III

"முன்பின் அறியா வென்னை,
மூவாக் கவிதைப் பண்பால்,,
என்பும் உருக வைத்தாய்"
என்றே பாடி அன்றென்
கன்னிக் கவிதை போற்றிக்
கலைதனை நாட வைத்தீர்
அன்புக் குரவ! நின்னை
அடியேன் மறக்கப் போமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV

"'கலையுடன் தமிழுங் கோவும்
'கண்ணளிச் சேயும் எந்தன்
நிலைதரு வாழ்வுப் பேருய்
நின்றிடும் மனையும்" நல்ல
நலமுடன் உள்ளார்; என்றே
நன்மடல் விடுத்தீர் அன்று;
அலையிடைத் துரும்பா யவரும்
அலைகின்றார் காணீர் இன்றே

V

சேவையைத் தமிழுக் காக்கிச்
சேர்ந்திடும் அழகுத் தமிழாம்
பூவையில் உயிரை வைத்தீர்
புதியவெம் அரசுத் திட்டம்
பாவையை வாட்டல் கண்டே
பரிதவிப் பீர்என் றஞ்சி
ஆவியைத் தனதே யாக்கி
அமரனுய்க் காத்தான் தெய்வம்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநெறிக்காவலர் உயர் திரு. முத்துசாமிப்பிள்ளை அவர்கள் நல்கியவை

''உலகோம்பும் எழுத்தாளன் உறங்குவானோ'' என்று முரசு அறை கின்றார் வித்துவான் வேந்தனார் கவிதைப் பூம்பொழிலில். பொதுவுடைமைக் கட்சிக் குரலாக விளங்கிய புலவர் பெருமகனார் தமிழும் சைவமும் ஓங்கத் தன்குரலைமாற்றிக் கொண்டார்.

கவிதைப் பூம்பொழில் என்னும் இச்சிறந்தநூல் தெய்வம், தமிழ், சான்றோர், குழந்தை, மொழி, நாடு, வாழ்வு, காவியம் என்னும் அங்கங் களை உடைத்து. தெய்வத்தைப்பற்றிய பாகம் திரு நல்லூர்க் குயிற்பத் துடன் ஆரம்பமாகின்றது. ''அன்பர்க்கினியான் அறுமுகன்'' ''வள்ளிக் குகந்த மணவாளன் மாலோன் மருகன்'' வரக்கூவாய் என்று ''கல்லும் கனியக் கூவி உளங்களிக்கும் குயி''லிடம் தூது விடுகின்றார் புலவர்.

தமிழின் இனிமையையும் பெருமையையும் புலவர் தமிழ் ஆட்சியை யும் எடுத்துக் காட்டுகின்றன, தமிழ் என்னும் தலைப்பில் உண்டான பாடல்கள். தெய்வப்புலவன் வள்ளுவன், கம்பன், நாவலர், காவலன் சேர். பொன் இராமநாதன் அவர்கள், காந்தி, பாரதி, தங்கத் தமிழ்புலவன் 'நாவாலியூர் சோமசுந்தரப் புலவர்', நவரத்தினசாமி அவர்களின் சேவைகளையும் பெருமைகளையும் பற்றிக் கூறுகின்றன சான்றோர் என்னும் பகுதியில் உண்டான பாடல்கள்.

குழந்தை மொழி என்னும் பாகத்தில் முப்பத்துஐந்து பாடல் அமைந் திருக்கின்றன.

நல்லூரில் பிறந்தவர்
நல்லறிவு நிறைந்தவர்
எல்லோருக்கும் இனியவர்
ஈசனையே பணிபவர்

என்று ஆறுமுகநாவலரைப்பற்றிப் பாடப்பெற்றிருக்கின்றது. குழந்தைகள் எல்லோரும் மிக எளிதில் படித்து விளங்கி இன்புறக்கூடியதாக எல்லாப் பாடல்களும் இருக்கின்றன.

சிறுவர்களும், பெரியோர்களும், கற்றவர்களும், கல்லாதவர்களும், மற்றையவர்களும் கற்றுக்காமுறக் கூடியதாக எல்லாப் பாடல்களும் மிக எளிய நடையில் சொற்சுவை பொருட்சுவை தம் அகத்தே உடையன வாக இருக்கின்றன.

மறைந்துவிட்டார்; ஆனல் அவர்குரல் கவிதைப்பூம் பொழிலில் ஒலித் துக் கொண்டேயிருக்கின்றது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத்தந்தைக்கு........

அன்புடைத்தந்தையே!

நீங்கள் செந்தமிழையும் சிவநெறியையும் உங்களின் இருகண்களாகக் கொண்டு வாழ்ந்தீர்கள். இங்ஙனம் செந்தமிழையும் சிவநெறியையும் உங்கள் இருகண்களாகக் கொண்ட தன்மையினால் இந்நிலவுலகத்தில் அறிவாற்றல் நிரம்பிய பெருந்தகையாளராகத் திகழ்ந்தீர்கள்; ஆழ்ந்த சிந்தனையுடனும் அயராத தொண்டுள்ளத்துடனும் அல்லும் பகலும் பணியாற்றி அகம் மகிழ்ந்தீர்கள்; நாளும் பொழுதும் உங்களை நாடிவருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று வேண்டுவன செய்து விருந்தளித்தீர்கள்; ஓய்வு நேரங்களில் கல்விக்கடலில் ஆழ்ந்திருந்தீர்கள்; இத்தகைய பண்புகளை எல்லாம் பதினெட்டு ஆண்டுக் காலமாகத் தங்கள் மருங்கில் இருந்து கண்டு களித்தேன். ஆனால் இன்று கவலைக்கடலில் எங்களை ஆழ்த்தி விட்டு நீங்கள் தில்லையில் நின்றாடும் சிவன்தாள் அடைந்து விட்டீர்கள்.

உங்கள் அன்பாலும் ஆதரவாலும் இன்புற்று நான் வாழ்ந்த பதினெட்டு ஆண்டுக் காலமும் என் நெஞ்சத்திரையில் நின்று நீங்கும் நிலைமை உடையதன்று. நீங்கள் உங்கள் குழந்தைகளாகிய எங்கள்மேல் அளவில்லா அன்பைச் சொரிந்தீர்கள்; நாங்கள் விரும்பியவற்றை எல்லாம் வேண்டி அளித்து எங்களை இன்பக்கடலில் திளைக்கச் செய்தீர்கள். நாங்கள் தவறுசெய்த போதெல்லாம் இன்மொழிகளால் தகுந்த நெறிகளை எடுத்துக்கூறி எங்களை நல்வழிப்படுத்தினீர்கள்; இங்ஙனமாகப் பலவழிகளிலும் துன்பத்தின் சாயல் படியாத நிலையில் எங்களை வளர்த்த நீங்கள் இன்று துன்பக்கடலில் எங்களை ஆழ்த்தி விட்டுச் சென்றடையாச் சிவபதமெய்திவிட்டீர்கள்.

அறிவுத்தந்தையே! நீங்கள் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் கல்வியில் சிறந்தநிலையை அடையவேண்டும் என்ற சிந்தனையுடையவராகவே இருந்ததோடு அதன் பொருட்டு எங்களுக்கும் பல வகைகளில் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தீர்கள். "உங்கள் வாழ்க்கையில் ஒரு நிமிடநேரத்தையும் பயனின்றிக் கழிக்காதீர்கள்" என்று அறிவுறுத்தினீர்கள். "படிக்கும் பாடங்களில் விளங்காதவற்றை என்னிடம் கேளுங்கள்" என்று அடிக்கடி ஆர்வத்துடன் கூறினீர்கள். இங்ஙனம் எங்கள் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட நீங்கள் நாங்கள் கல்வியில் சிறந்த நிலையை எய்துமுன்னரே இவ்வுலக வாழ்க்கையை நீத்து விட்டீர்கள். இதனை மறந்து நாங்கள் எங்ஙனம் ஆறியிருப்போம்?

இலக்கியம் படிக்கும் பொழுது விளங்காத பகுதிகளைத் தங்களிடம் கேட்டால் மிக்க திருத்தமான விளக்கத்துடன் இலக்கிய நயத்தை இனிக்க இனிக்க எனக்கு வழங்குவீர்களே, அதனை நான் எங்ஙனம் மறந்து வாழ்வேன்? இலக்கிய நுகர்ச்சியினால் உந்தப்பட்டு உங்களை மறந்தநிலையில் உணர்ச்சித்துடிப்புடன் கம்பன கவிதைகளை நீங்கள் படிக்கும் பொழுது உங்கள் ஆர்வக்குரலைக் கேட்பதற்காக ஏங்கித் தவிக்கின்றேன்.

தமிழில் உள்ள பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரந்தான் சிறந்தது என்று கூறுவீர்களே, "ஏன் அப்படிக் கூறுகின்றீர்கள்"? என்று கேட்டால் **"அளவெடுத்துச் சட்டை தைப்பது போல ஆரோ ஒருவர் கூறிய இலக்கணங்கள் யாவும் அமைய வேண்டுமென எண்ணிப் படைக்கப்பட்ட காப்பிய வரிசையில் சிலப்பதிகாரம் சேராது"** என்று கூறுவீர்களே. அத்துடன் **கச்சியப்பருக்கொரு அசமுகி, கம்பருக்கொரு சூர்ப்பனகை; கச்சியப்பருக்கொரு பானுகோபன், கம்பருக்கொரு இந்திரசித்தன்: கச்சியப்பருக்குத் தேவர் சிறை, கம்பருக்குச் சீதைசிறை என ஒருகாப்பியத்தின் இலக்கிய மாந்தருடன் ஒருகாப்பியத்தின் இலக்கிய மாந்தர்கள் கட்டித் தழுவுகின்றார்கள்; முட்டிமோது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கின்றீர்கள்; சிலப்பதிகாரத்தில் இத்தகைய செயற்கைக் காவிய அமைப்புகள் ஒன்றும் கிடையாது"** என்றும் எழுச்சியோடு சிலப்பதிகாரத்தின் பெருமையினை எடுத்துரைத்து என்னை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்திச் சிந்திக்க வைப்பீர்களே. இனி இத்தகைய எழுச்சி மொழிகளை எல்லாம் யார் கூற நான் கேட்டு மகிழ்வேன்?

நாவன்மை மிக்கவராகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளாகிய எங்களைப் பேசசாற்றல் உடையவர்களாகச் செய்ய வேண்டும் என்ற பெரு விருப்புடன் கல்லூரிகளில் நடைபெறும் செந்தமிழ்ப் பேச்சுப்போட்டிகளில் பங்குபற்றுமாறு ஊக்குவித்தீர்கள். அத்துடன் வேறுபல அறிவுநூல்களையும் கற்குமாறு கூறி அவை பின்பு எவ்விதத்தில் பயன்படும் என்பதையும் எடுத்துரைத்தீர்கள். பாடசாலைப் பாடங்களை மட்டும் படித்தால் அறிவுவளராது அவற்றோடு கற்றறிந்த அறிஞர்களின் விரிவுரைகளையும் கேட்கவேண்டும்" என்று கூறிச் சிறந்த அறிஞர்கள சொற்பொழிவாற்றும் விழாக்களுக்கெல்லாம் எங்களை அழைத்துச் சென்ற நீங்கள் இன்று இவற்றையெல்லாம் மறந்து எங்களையும் பிரிந்து ஈசன் திருவடி நீழலை அடைந்து விட்டீர்கள்.

தனித்தமிழ் நடையில் அடுக்கடுக்காக வாக்கியங்களை அமைத்து அரும்பெரும் நூல்களை இயற்றிய உயர்திரு மறைமலையடிகளாரையே நான் என் ஆசிரியராகவும் வழிகாட்டியாளராகவும் கொண்டேன் என்று பலகால் எங்களுக்குக் கூறி, அவர்வழியைப் பின்பற்றி வடமொழி கலவாத தூய தமிழ்நடையில் பல கட்டுரைகளை வரைந்தீர்கள். அவற்றையெல்லாம் எங்களுக்கு எடுத்துக்காட்டி, 'நீங்கள் பிற்காலத்தில் இவற்றை நூல்களாகத் தொகுத்து விடவேண்டும்" என்று கூறினீர்கள். இங்ஙனமெல்லாம் செப்பி எங்கள உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அருமைத்தந்தையே, உங்களை இழந்த நாங்கள் இந்நிலையற்ற உலகத்தில் வாழவிருப்பமின்றித் தவிக்கின்றோம்.

உங்கள் குழந்தைகளாகிய எங்கள்மேல் அளவில்லாத அன்பைச் சொரிந்த நீங்கள் அதனிலும் மேலாக கல்விச்செல்வத்தில் அன்பை வைத்தீர்கள்; புத்தகங்களை உங்கள் உயிரினும் மேலாக மதித்தீர்கள்; தமிழ்மொழியைத் தங்கள் தாயினும் மேலாகப் போற்றினீர்கள்; கல்விச்செல்வந்தான் நிலையானது என்று கடைசிநாள்வரை கல்வி வளர்ச்சியிலேயே களிப்பெய்தினீர்கள். இங்ஙனம் கலைத்தெய்வத்தைப் போற்றிய நீங்கள் உங்கள் இளமைக் கால வரலாற்றை எல்லாம் எங்களுக்குச் சொல்லிச் சொல்லி அகங் குளிர்ந்தீர்கள்,

*"உள்ளம் உவகையுற ஊக்கமுடன் வீற்றிருந்து*
*அள்ளுசுவைத் தேனை ஆர்ந்திடல்போல் — விள்ளுஞ்சீர்*
*தெய்வமார் செந்தமிழைத் தேர்ந்துநான் கற்றவிடம்*
*ஐயனூர் கோவிலடி ஆல்"*

என்று அளவில்லா ஆனந்தத்துடன் நீங்கள் கல்வி கற்ற இடத்தை விளம்பி மகிழ்வீர்களே. இவற்றை எல்லாம் இப்பிறவியில் நாங்கள் மறந்து வாழ்தல் கூடுமா?

தகைசால்தந்தையே! சைவசமய வளர்ச்சிக்காக நீங்கள் இளமைக்காலம் தொட்டு அயராது உழைத்து வந்தீர்கள். இதனை நீங்கள் எழுதிய கட்டுரைகள் மூலம் யாம் அறியக் கூடியதாக இருந்தது. சமயப்பற்றுமிக்க நீங்கள் "இறைவன் எங்கும் இருக்கின்றான் அவனை நாங்கள் கோவிலில் சென்று வழிபட வேண்டிய அவசியமில்லை. எமது மனம் தூய்மையுடையதாக இருந்தால் இறைவன் எமது மனதிலும் இருப்பான்" என்று எங்களுக்கு கூறுவீர்களே. அல்லும் பகலும் அடியார்கள் அழுதும் தொழுதும் அருள் வேண்டும் நல்லூர்க் கந்தப் பெருமானை நாளும் பொழுதும் உங்கள் நாவில் இருத்திப் பாப்புனைந்து மகிழ்வீர்களே. மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த திருவாசகத்தில் உங்கள் சிந்தையைப் பதித்து அந்நூலின் கண் அமைந்துள்ள பாடல்களை நீங்கள் உள்ளம் உருகிப் பாடும் பொழுது தங்கள் அருகாமையில் வீற்றிருந்து ஆனந்தத்தேனை அள்ளிப் பருகிய நாங்கள் இன்று தங்கள் அன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்குரலைக்கேட்க முடியாது அல்லற் படு கின்றோம்.

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமுங்
குன்றே அனையாய் யென்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

என மணிவாசகப் பெருமான் குழைந்து பாடிய செய்யுளை நீங்களும் உங்கள் உள்ளம் உருகிப் பலமுறையும் பாடிப் பாடி மகிழ்வீர்களே. இனி அங்கிலையில் உங்களைக் கண்டுகளிக்க முடியாது என்பதை எண்ண எண்ண எங்களது உள்ளங்கள் உருகுகின்றன.

தண்ணளி வாய்ந்த எங்கள் தந்தையே, நீங்கள் எங்களுக்குக் கூறிய அறிவுரைகள் உயர்ந்த நோக்கமுடையன. "உண்மையும், ஊக்கமும், உள்ளத்தூய்மையும் உடையவர்களாய் நீங்கள் வாழவேண்டும்" என்று ஆழ்ந்த அன்புடனும் ஆசையுடனும் எமக்கு அறிவு புகட்டுவீர்களே இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது. ஆகையால் நாம் ஒருகாரியத்தையும் நாளை செய்வோம் என்று பின் போடக்கூடாது உடனடியாகச் செய்து விட வேண்டும்" என்று எமக்கு அறிவுபுகட்டிய நீங்கள் நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையை வெறுத்துச் சிவன்தாள் அடைந்து விட்டீர்கள். எனினும் நீங்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கைநெறி எதிர்காலத்தில் எங்களை எல்லாம் ஈடேற்றி வைக்கும என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

ஆசிரியப் பெருந்தகையே! எவ்வாறு நீங்கள் உங்கள் பிள்ளைகளாகிய எங்களுக்கு அன்பும் ஆதரவும் தந்து வளர்த்தீர்களோ அவ்வாறே தங்கள் மாணவ மாணவிகளிடமும் அன்பைச் சொரிந்தீர்கள். இப்பாடம் விளங்கவில்லை விளங்கப்படுத்துங்கள் என்று உங்கள் வீடு தேடிவந்து கேட்பவர்களுக்கு மறுக்காது அப்பாடத்தை விளங்கவைத்ததோடு அமையாது திரும்பவும் "உங்கள் மனதில் இது தெளிவாகப் பதிந்ததா என்று கேட்பீர்களே. இங்ஙனம் கல்விசம்பந்தமாக யார் வந்து எதைக் கேட்டாலும் அதனை மறுத்துரைக்காது ஆர்வத்துடன் செய்து அகம மகிழ்வீர்களே; ஒருவரிடம் பேச்சாற்றல் இருப்பதை நீங்கள் அறிந்தவுடனே அவரைச் சிறந்த பேச்சாளராக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு பல விதத்தில் அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வருவீர்களே; இத்தகைய செயல்களை எல்லாம் மனமுவந்து நீங்கள் செய்வதை உங்கள் அருகில் இருந்து கண்டு களித்த நாங்கள் இன்று இவற்றை யெல்லாம் எண்ணி எண்ணி ஏங்குகின்றோம்.

நாவன்மையும் பாவன்மையும் நற்றமிழ் நடையும் மிக்க உங்கள் உள்ளொளியில் கலந்து உயர்ந்த நோக்கங்களையும் சிறந்த கலையுணர்வையும் நிறைந்த சமயப் பற்றையும் பெற்று இறுமாந்த நாங்கள் இன்று கவலை என்னும் கடலின் கண் ஆழ்ந்து அலறுகின்றோம்.

எங்கள் தந்தையே மேசையின் இருபக்கங்களிலும் புத்தகங்களை அடுக்கி அதன் நடுவே நாற்காலி போட்டு வீற்றிருக்கும் உங்கள் கலைக்கோலத்தையும் நெற்றியில் நீறும் சந்தனமும் துலங்க கைகளில் புத்தகங்களைத் தாங்கி, நீங்கள் பாடசாலைக்குச் செல்லும் அருட்கோலத்தைபும நாங்கள் கண்டு களிக்கமுடியாது கதறுகின்றோம். உங்கள் பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் என்றும் ஓங்கும். தங்கள ஆத்மா சாந்தி அடைய ஆராவேட்கையுடன் ஆலமுண்ட ஈசன் அடியிணைகளை ஏத்துகின்றேன்.

வணக்கம்.

தங்கள் அன்புப் புதல்வி;
கலையரசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org